1298

CHALUKU SUNDRAM MUDALIAR

CHARITHRA KATHAH PRASUNGA KEETHAI

OR

POEM ON THE PARABLE OF THE PRODIGAL SON.

LUKE 15: 11-32

COMPOSED BY

E. C. M. LAZARUS,

The Pastor of the Baptist Mission,

Ootacamund.

THE REGISTRAR OFFICE OF THE ... 9 MAR 1926 MADRAS

"Repent for the kingdom of heaven is at hand." Matt. IV : 17.

"Joy shall be in heaven over one sinner that repenteth." Luke. 15. 7.

(SECOND EDITON.)

Ootacamund:

PRINTED AT ST. ANTONY'S PRESS,

COMMERCIAL ROAD.

1925.

Price: As. 6.

...pies. 30—9—1925.

224681

B

சளுக்குச் சுந்திரம் முதலியார்

சரித்திர

கதாப்பிரசங்கக்கீதை.

அல்லது

கெட்டக்குமாரன் உவமை லூக் : 15 : 11—32.

இஃது

ஒத்தகமந்திலுள்ள பாப்திஸ்த் மிஷன்

சுதேசபோதகராகிய

இ. சி. ம. லாசரஸ் என்பவரால்

இயற்றப்பட்டது.

'மனந் திரும்புகள், பரலோக ராஜயம் சமீபித்திருக்கிறது."
. 4. 17.

"மனந் திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில்
ிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்" லூக். 15. 7.

(இரண்டாம் பதிப்பு.)

நீலகிரி, உதகமண்டலம்
அரீச் : அந்தோனியார் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1925.

றும் பெயரிட்டு, இக்கதைக்கு ஷெ சனாக்குச்சந்திர முதலிகாரணனானபடியினாலும், அவன் சரித்திரம் நற்போதகத்துக்குரிய தாயிருப்பதாலும் அதனை யிங்குசெய்யுள்ரூபமாயமைத் திருக்கின்றமையாலும் இதற்குச் சனாக்குச்சந்திர முதலியார் சரித்திரக் கதாபிரசங்கக்கீதை யென நாமகரணஞ்சூட்டப்பட்டது.

பல கலியாண முதலிய உற்சவங்களிலும் வெளிகிராமங்களில் பெருங்கூட்டமான இதர மதஸ்தர்கள் மத்தியிலும் இதனைப்பாடி கதாபிரசங்கஞ் செய்துவந்ததில் அநேகருக்கு ஆத்தும சரீரப்பிரகாரமான நன்மைகள் உண்டாயிருப்பதாய்த் தெரிவித்து சீக்கிரத்தில் அச்சடித்துத்தரவேணுமென அநேகர் விரும்பிக் கேட்டுக்கொண்ட படியினால் இதனை அச்சியற்றி வெளிப்படுத்தவு முயன்றேன். ஆகையால் இச்சிறுப்பிரபந்தத்தை கையாடும் நண்பர்கள், மற்றவர்களுக்கும் இம்மை மறுமைக்குரிய நன்மைகளுண்டாகும்படியானக் கருத்துங் கவலையுமாய்ப் பாடி தங்களாலியன்றமட்டும் இதன் தாற்பரியங்களை விபரித்து ஆண்டவருடைய திருநாமத்திற்கு மகிமையையும் ஆத்துமாக்களுக்கு ஈடேற்றத்தையுங்கொண்டு வருவார்களானால் அதுவே அடியேனுடைய பிரயாசத்திற்கு அவர்களால் அருளப்பட்ட அலங்காரமானப் பொற் சரப்பணிபோலிருக்கும் ஆதலா லப்படி செய்ய என நண்பர்களை மிகவும் வந்தித்துக்கேட்டுக் கொள்ளுகிறேன்.

இதனை அச்சிடும்படியான விஷயத்தில் நன்முயற்சியெடுத்து பேருபகாரம் புரிந்த சகோதரராகிய (குன்னூர் செங்கால்வாலி எஸ்டேட் மானேஜர்) ம-ா-ா-ஸ்ரீ ஜான்ஐசிக் அவர்களுக்கும் மற்றும் சகோதரர்களுக்கும் நான மிகவும் நன்றியறிதலுள்ளவனா யிருக்கிறேன்:

கர்த்தர் இச்சிறுவேலையை எல்லாருடைய நற்பிரயோஜனத்திற்கென்று ஆசீர்வதித்தருள்வாராக.

ஒத்தக்கமந்து
1925,

இங்ஙனம்,
E. C. M. LAZARUS.

கடவுடுணை.

சனுக்குச் சுந்த்ரமுதலியார் சரித்திர

கதா பிரசங்க கீதை.

பிதாவுக்குத் துதி.

வெண்பா.

சத்யசுவி சேஷமதிற் சற்குரு கிறிஸ்துரைத்த
உத்த வுவமைகளிலே ஒன்றான — மெத்தவுமாய்க்
கெட்டமக னின்கதையைக் கேள்கிளர சொல்லுதற்கு
சிட்டபிதா தாள்துணைய தே

குமாரனுக்குத் துதி.

விருத்தம்.

திட்டமாய் கிறிஸ்துநாதர் திருவுளங் கூர்ந்துவிந்த
எட்டுதிக் குலசோர்சற்க வியாபிய வுவமையான
கெட்டசே யன்காதையைக் கீர்த்தனையாலே செப்ப
கட்டளை செயுமேசையன் கழல்கலே காப்பதாமே.

பரிசுத்த ஆவிக்குத் துதி.

கட்டளைக் கலித்துறை.

வானோர் துதிக்குங் கிறிஸ்தேசுநாதர் தம்வாய்மலர்ந்த
ஞானார்த்தமாக நவிலுபதேசமா நன்மறையில்
தானேகக்கெட்ட மகனுவமான நற்சங்கதியை
கான்பாடி சொல்லப் பரிசுத்த ஆவியர் நற்றுணையே,

திரியேகருக்குத் துதி.

தேவாரம்.

உன்னதகுருகிறிஸ்து உவமையாய் மறையிற்சொன்ன
சின்னப்பட்டணைய கெட்டசேயனின் சரித்திரத்தை
இன்னிலத்தவர்க்குப் பாட்டாலியம்பியான் விஸ்தரிக்க
நன்னயதிரியேகத்வ நற்பரன்றான் காப்பாமே.

அவையடக்கம்.

விருத்தம்.

பாலர்கள்தெத்தி சோச்சிப்பாச்சியென் றுளறினாலும்
சாலவேமகிழ்ந்து தந்தைத் தாயருமணைட்பரன்றோ
ஞாலமேற் கவிஞர் முன்னில் நானுளர்வதுமவ்வாறால்.
சீலமுற் றணைப்பரல்லால் சினந்தறோ சித்திடாரே.

இதுவுமது.

கிள்ளைபேசிடமகிழ்ந்து கேட்பர்கள் சிறிதுநேரம்
சள்ளையென்றலன்று சீச்ரம் சலித்திடுவார்களானால்
பிள்ளைச்சொல் சலியாசென்றும் பெற்றவர் மகிழ்வர்போல
பிள்ளையென் கவியைக் கற்றோர் பிரீதியுற்றேற்பர்தாமே.

கதையின் வரலாறு:

விருத்தம்.

ஆரணத்திற் பிரபொருவ ரிருந்ததாக
அரன்கிறிஸ்துரைத்த வொரு வவமையுண்டு
ஏரணியு மவர்க்குமவர் மைந்தர்க்கும்பேர்
இயம்பவிலை யாதலினூர் சிறப்பதாக
காரணமாய்த் தனசுந்தரம் சளுக்குச்சுந்த்ரம்
கனச்சுந்தரமென வெயரிட்டவர் சரித்ரம்
தோரணையாய் வகுத்து விஸ்தரித்துத் தெள்ள
சொல்லுவேன் எல்லவர்க்குந் துலங்கத்தானே.

இதுவுமது.

விருத்தம்.

ஓதிட வெளிலன்னோர்கள் உற்றதோர் ஊரின்பேரும்
போதக மெனுவேதத்திற் புகன்று காண்பிக்கவில்லை
ஆகலால் ஓரானூரொன்றனைந்து சாரணப்பேராக
பூதவ மதில்விளக்கிப் பெருளுறைப் பகருவேனே.

கீர்த்தனம்.

இராகம் சுருட்டி, சாப்புதாளம்.

கண்ணிகள்.

1.

ஓரான் ஊரதிலே — தனசுந்தரி
மாராஜனிருந்தான் — அந்த
மாராஜன் றனக்கு — ரண்டு
பேராம் புத்திரர்கள்.

2.

புத்திரர் ரண்டுபேரில் — இளையவன்
மெத்தவுஞ் சுட்டிபயல் — அந்த
சுட்டிபயல் நாமம் — சனுக்குச்
சுந்திரமென்பதுவாம்.

3.

சுந்திரமாயெழுந்து — ஒருநாள்
தந்தையிடத்திற் சென்று — தன்
மந்தப்புத்தி யதனால் — அவனும்
வழுத்துவான் அப்பன்முன்னே,

4.

அப்பா அப்பாவே — உம் ஆஸ்தியில்
ஆன எனது பங்கை — எனக்
கிப்போதே கொடுமின் — கொண்டுப்போய்
இங்கிலத்தில் பிழைப்பேன்.

5.

இந்நிலத்தில் பிழைப்பேன் — எனவவன்
இயம்பவே தகப்பன் — செஞ்சி
என்னைவிட் டேகாதே — என்றுமதி
இயம்பினான் பலதாய்.

தகப்பனார் சொல்லும் புத்திமதிகள்.

கீர்த்தனம்.

இராகம் சங்கராபரணம், ஆதிதாளம்.

பல்லவி.

என்னைவிட்டுப் போகாதப்பா — சளுக்குச் சுந்திரம்
என்னைவிட்டுப் போகாதப்பா.

அநுபல்லவி.

எசளுக்குச் சுந்திரம் மக — னே சளுக்குச் சுந்திரம் பொன்
னேசளுக்குச் சுந்திரம் கண் — ணே சளுக்குச்சுந்திரம் நீ.

சரணங்கள்.

1.

உன்னைவிட்டு நான்பிரிந்து — சளுக்குச் சுந்திரம்
உயிரோ டிருப்பேனோடா — இங்கு
என்னகுறை யுனக்குச் — சளுக்குச் சுந்திரம்
இருந்து வருத்துதடா. எசளுக்கு.

2.

வேண திரவியங்கள் — சளுக்குச் சுந்திரம்
தோணத் தருவேனடா — நீ
நாணய மாகவேதான் — சளுக்குச் சுந்திரமிந்
நாட்டி லிருப்பாயடா. எசளுக்கு.

3.

அன்னிய தேசஞ்சென்றால் — சளுக்குச் சுந்திரம்
அலங்கோல மாவாயடா — உன்றன்
பொன்பொருள் பொக்கிஷங்கள் — சளுக்குச் சுந்திரம்
போக்கடிந்துப் போகுமடா. எசளுக்கு.

4

ஆஸ்தி பெரிதல்லடா—சளுக்க் ஆசுந்திரமுன்
ஆத்மம் பெரிதாமடா—உந்தன்
ஆத்துமத்தைக் கெடுத்தால்—சளுக்குச் சுந்திரம்ஈ
டாகளதைத் தருவாய். ஏசளுக்கு.

5.

தேவபக்தியை விட்டால்—சளுக்குச் சுந்திரம்
சிற்றின்பஞ் சேருமடா—வெகு
பாவம் பழிகளெல்லாம்—சளுக்குச் சுந்திரமுன்
பங்காய் முடியுமடா. ஏசளுக்கு.

6.

பெத்த மனமெறிய—சளுக்குச் சுந்திரம்
பிழைத்தென்ன லாபமடா—சொல்லும்
புத்திகேளாத பிள்ளை—சளுக்குச் சுந்திரம்
பூமீதிருந் தென்னடா. ஏ சளுக்கு.

7.

தந்தை மொழிகடத்தல்—சளுக்குச் சுந்திரம்
சாமி துரோகமடா—உன்றன்
சொந்த ஆத்துமங்கெடல் சளுக்குச் சுந்திரம்
சொர்க்க துரோகமடா. ஏசளுக்கு.

8.

வாழ்நாள் நீடிப்பதற்கு—சளுக்குச் சுந்திரம்
மாதாபிதாமார்களை—நீ
தாழ்ந்து கனஞ்செய்யென்று—சளுக்குச் சுந்திரம்
சத்தியங் கூறுதடா. ஏசளுக்கு.

9.

தானென்ற மூப்பானது—சளுக்குச் சுந்திரம்
தலையில்லா முண்டமடா—நான்
நானென்று சொன்னவர்கள்—சளுக்குச் சுந்திரம்
நாசப்பட்டுப் போனாரடா. ஏசளுக்கு.

10.

மெய்யின் தசை வரண்டு—சளுக்குச் சுந்திரம்
மேனி குலையுடமடா—அப்போ

தையையோ கெட்டேனென்று — சளுக்குச் சுந்திரம்
அலறிய முவாயடா. ஏசளுக்கு.

11.

அலறிவருந்துகையில் — சளுக்குச் சுந்திரம்
ஆற்றுவோரைக் காணுயடா — பின்னும்
பலரா லிகழப்பட்டு — சளுக்குச் சுந்திரம்
பவுசு குலைவாயடா. ஏசளுக்கு.

12.

சொல்லவேண்டிய தெல்லாம் சளுக்குச் சுந்திரம்
சொல்லி முடித்தேனடா — இனி
நல்லவழி யெதுவோ — சளுக்குச் சுந்திரம்
நாடி நடப்பாயடா. ஏசளுக்கு.

சளுக்கன் மீண்டுந் துடுக்காய் கேட்குதல்.
முதலாம் பாட்டின் 6-ம் கண்ணிகள்.

6.

நல்லவழி நடக்க — அவனுக்கு
நானு விதமாக — தந்தை
சொல்லிய புத்திகளை — யந்த
சுட்டியுங் கேட்கவில்லை.

7.

சுட்டித் தனத்தாலே — அவனுந்
துடுக்காகவே பேசி — ஒரு
அட்டியுஞ் செய்யாமல் — என்பங்கை
அளியுமெனக் கேட்டான்.

8.

கேட்டிடவே தகப்பன் — யாதொன்றுக்கும்
கிஞ்சித்து மஞ்சாமல் — வெகு
தாட்டிகமா யெழுந்து — அவன் பங்கை
தந்தான் தந்தானே.

தந்தை சஞக்கனுக்கு பாகமீதல்.

கீர்த்தனம்.

இராகம் தசாவந்தி, ஆதிதாளம்.

பல்லவி.

தந்தானே தந்தனனே—தனந்
தந்தனனே தந்தை தந்தனனே. தந்

அனுபல்லவி.

தந்தனன் சு—தந்தரந்தன்
மைந்தனுக்குச்—சொந்தமாக.

சரணங்கள்.

1.

ஆனைகளும் சேனைகளும்—பல
ஆடுகளும் பசுமாடுகளும்
சேணக் குதிரைகளும்—ரதத்
தேர்குதிரை—யொட்டகங்களும்
வேணமட்டு மவன்கண்கள்-காணும்பொரு ளொவ்வொன்றிலும்
தோணமட்டு மாகமண-மானமட்டும்-மைந்தனுக்கு. தந்.

2.

முத்துரத்ன—ஆரங்களும்—மா
மோகன மாலைகளும்
ரத்தினக் கல்லிழைத்த—பல
நல்ல மாற்பதக்கங்களும்
பத்திரைமாத் தபாஞ்சிப்—பணுதிக்கணையாளியும்
முத்திரை மோதிரங்காப்—மெத்தவு மெத்தவு மாக. தந்.

3.

பொற்சரி பாகைகளும்—கனப்
பூம்பட்டு சால்வைகளும்
நற்சரி வேஷ்டிகளும்—வெகு
நல்லங்க வஸ்திரங்களும்
பற்பல திணுசுசட்டை—பட்டுக்குடைபாதரட்சை
கற்பதிப் பிடிதடியுங்—கணக்கிடாதபடிக்கு. தந்.

4.

லக்ஷலக்ஷ மோராக்களும்—வெகு
நற்றங்க வாகன்களும்
பச்சை சிவிகைகளும்—அந்த
பல்லக்குப் போகிகளும்
அச்சுவண்டி மாட்டுவண்டி—ஆட்கள் தள்ளும் சின்னவண்டி
உச்சிதகோச்சுவண்டி—உயர்ந்த சாரட்டுவண்டி. தக்.

5.

நன்செய் புன்செய் நிலங்களதும்—வேண
நல்விதை தானியங்களும்
பஞ்சணை மெத்தைகளும்—கட்டில்
பாய்மேசை காற்காலிகளும்
வஞ்சனையில்லாசபடி—வகுத்துப் பகுத்தி தந்தை
நெஞ்சாறவே கொடுத்து—நிறைய அவன் விருப்பம். தந்

போது விருத்தம்.

செப்பொணு விலையுயர்ந்த ரத்னாரங்கள்
நிஜசுதஜுசான பெரும்பொருட்கள் தொட்டு
உப்புச்சட்டி வரவோடு வரையுமுள்ள
ஒவ்வொன்றிலு வேணமட்டுங் கூட்டிகட்டி
ஒப்புகொள்வாயென தந்தை செப்பி தக்கித்
தோலமிட்டு வழுதுநிற்கச் சளுக்குச் சுந்தரம்
செப்பமுடன் யாவற்றையுஞ் சேர்த்தனைத்துத்
திரும்பிட்டான கம்பிலைக்க விரும்பிட்டானே.

தந்தைக் கொடுத்தத் தனங்களை சளுக்கன் சேர்த்துக்கொள்ளுதல்.

கீர்த்தனம்.

இராகம் உசேனி, ஏகதாளம்.

பல்லவி.

சேர்த்துகொண்டான்—பொருட்களைச்
சேர்த்து கொண்டான்.

அநுபல்லவி.

சேர்த்துகொண்டான் வழி—பார்த்துகொண்டான் வேறே.

சரணங்கள்.

1.

தந்தையின் போதகந்—தள்ளிய வாகம்
நொந்து குழைந்து மெலிந்து—தளர்ந்திட
சொந்த இஷ்டபடி—சென்று மனதினில்
வந்த வழியில்—அலைந்து திரிந்திட. சேர்த்.

2.

தூரதேச மொன்றைத்—தேடி நாடியதிற்
சோரக் கருதிதன்—சித்தம் பூரித்துபோய்
ஆரா தூரியாய்ப்—பொருளை செலவிட்டு
சீரற்று கெட்டு—திகைத்து தவித்திட. சேர்த்.

3.

சேர்த்தப் பொருட்களும்—சேனைப்பரிவாரம்
சேர்ந்தப் புறப்பட—செய்து தனக்காக
பார்த்தேறினன் வாசி—பஞ்சக் கல்யாணிமேல்
பறக்குதி வனினி—பஞ்சாய்ப் பறப்பான்போல். சேர்த்.

4.

சுட்டிபயலிவன்—மட்டி தனத்தாலே
கெட்டலையும்படி—இட்டன் தந்தைவீட்டை
விட்டு தட்டுகெட்டு—முட்டுப் படப்புறப்
பட்டான்தன் ஆஸ்தியை—வெட்டியில்போக்கிட சேர்த்.

5.

காட்டைவிட்டு சொந்த—வீட்டைவிட்டு தந்தை
வாட்டமுற துக்க—மாக்கிவிட்டுக் கெட்டப்
பாட்டை யதிலடி—மாட்டைப்போல சென்று
நீட்டிவிட்டான் கம்பி—காட்டிவிட்டான் தம்பி. சேர்த்.

சலுக்கன் தன் தந்தையைவிட்டு ஓடிப்போகுதல்.

கீர்த்தனம்.

இராகம் பைரவி, அடதாளசாப்பு.

பல்லவி.

நீட்டினனே கம்பி—காட்டினனே தம்பி.

அநுபல்லவி.

நீட்டினனே தம்பி கம்பி—காட்டினனே வெம்பி வெம்பி
வாட்டமுற்றழுது தந்தை—மனமடி வாகிடவே.— நீட்.

சரணங்கள்.

1.

ஒன்றுமறியாத மட—பன்றிபயலடி படுங்
கன்றுபோல் துள்ளிக்குதித்து—சென்றழி வடைவதற்கு
நன்றிகெட்ட தோஷியிவன்—தன்தகப்பன் தன்னைவிட்டு
குன்றிகுராவி மெத்தக்—குருகி கருகிட்போக. நீட்.

2.

கர்த்தரைக் காட்டிக்கொடுத்த—கள்ளப்பயல் யூதாஸ்போலும்
சுத்தப்பட்ட பத்தும்பேரில்—ஒன்பதுபேர் போனப்போலும்
அர்த்தசாமத்திற் திரிந்து—ஐயனை விட்டோடிப்போன
பத்தமற்ற சீஷர்போலும்—பாவியிவனுங் கம்பி. நீட்.

3.

கொண்ட கணவனுக்கு—ரண்டகஞ்செய் முண்டைப்போலும்
பெண்டிருக்க பிறர்தாரங்—கண்டடையு மிண்டர்போலும்
துண்டரிக்க மானமெத்த—சண்டாள னிவனதிக
சண்டிதனங்கள் செய்து—சத்தங்காட்டாமல் கம்பி. நீட்.

4.

மெத்தப் பிரயாசைப்பட்டு—மெய்மறக்கப் பாடுபட்டு
புத்திமதி சொல்லிவைத்த—போதகர் கோவிலைவிட்டு
பத்கமற்று நன்றிகெட்டு—பாவத்தின் உணர்ச்சியற்று
சத்தியத்தை விட்டுப்போகும்—சபையார்ப் போகுமாபோல.

5.

பத்துமாதமுஞ் சுமந்து—பெற்றெடுத்த தாய்தந்தையை
நத்திகனஞ் செய்யாது—நாணங்கெட்ட மூளிபோலும்
கத்தப குணமுடையக்—காவாலி பயல்கள்போலும்
சத்தி குதித்துதரி—தலைகள் போகுமாப்போலும், நீட்.

6.

தாசி வேசிகளுக்குத்—தாளடிமை செய்துகெட்டு
காசி பணத்தைதோற்று—கஞ்சிக்கு தாணிக்குசெத்து
நீசக் கோலமடைந்து—நிந்தைப்பட மந்தப்பயல்
வாசிமீதேறியொரு—வார்த்தைக்கூட சொல்லாமல் நீட்,

சனுக்கன் போய்விட்டதுகண்டு தந்தைத் துக்கித்துப் புலம்பல்.

இராகம் நீலாம்புரி ரூபகதாளம்

கண்ணிகள்.

1.

என்னசெய்வேன் ஏதுசெய்வேன்-எப்படி சகித்திருப்பேன்
எந்தன்மகன் என்னைவிட்டு—ஏகிவிட்டானே ஐயையோ.

2.

அன்னியதேசத்திற் சென்று-அலங்கோல மாகிநின்று
நன்னயங் கெட்டலைவானோ-என்னவோ தெரியுதில்லை.

3.

துஷ்டர்களுடனே கூடி-துன்மார்க்கங்களில் நீடி
கஷ்டப்படுவானோ ஐயோ-காணக்கூடு தில்லையே.

4,

தாசிகள் வலையிற்சிக்கி-சத்துருவழியிற் புக்கி
சத்தியத்தை விட்டுகெட்டு-சாவேனோ என்னஐயோ.

5.

கன்னியர் மோசந்துட்பட்டு-கருகருத் துடல்கெட்டு
வின்னப்பட்டலைகுவானோ-என்னவோ விளங்கலையே.

6.

ஜெபதபஞ் செய்கின்றானோ-தேவாலயம் போறானோ
சிற்றின்ப மதிற்பெருகி-திரிகிறானோ என்னவோ.

7.

ஆஸ்தியை யிழந்தாலுந்தன்-ஆத்துமத்தைக் காப்பானாகில்
ஆனந்த பாக்யமதே-அப்படிசெய்வானோ என்னே.

8.

கும்பியுங் குழம்புதேசந்தன்-குலையும் பதறுதையோ
கம்முதே என்குறல் என்றன்-கண்மணி மகன்வாறானோ.

9.

என்றனை மறந்துப்போக-எப்படி துணிந்தானோ நான்
என்னகுறை செய்தேனென்றும்-எனக்கு தெரியுதில்லை.

10.

மறந்துபோனவனென்னை-நினைந்துருகானோ மனம்
மாறிகுண மாகிடானோ-மாண்டிடுவானோ என்னே.

11,

திரும்பி வரமாட்டானோ-திகழ்முகத்தைக் காட்டானோ
சென்றவழி யதைபார்த்து-திகைக்கின்றேனே ஐயையோ.

போது விருத்தம்.

தந்தையிந்தவாறழுக சளுக்குச் சுந்தரம்
சந்தோஷத்தோடு மனோவேகமான
பந்தய வோட்டக்குதிரையின மேலேற
பறக்குதிவனினி பஞ்சாய்ப்பறப்பான்போல
அந்தக்குதிரைக் காலினடியி னோசை
அடிபடடா உதைப்படடா கெடடா சீசீ
மந்தமதிபயலே யென்பதுபோல் கேட்டும்
மறந்து சத்திமங்கலத்துக் கேகின்றானே.

சளுக்கன்; குதிரையின்மேலேறி சத்திமங்கலம் என்னும் ஊருக்குப் போகுதல்.

(சத்திமங்கல மென்றால் கள்ளு சாராய முதலிய இலாகிரி வஸ்துகள் வடிக்கும் அல்லது செய்யுமிடம்.)

கீர்த்தனம்.

இராகம் கௌசிகம், ஆதிதாளம்.

பல்லவி.

பட்டா, பட்டா, பட்டா வென்று
பரக்குது பார் குதிரை—சல்
கெட்டா, கெட்டா, கெட்டா வென்று
கெனைக்குது பார் குதிரை.

அநுபல்லவி.

பட்டா, பட்டா, பட்டா—அடி
பட்டா, பட்டா, பட்டா—உதை
பட்டா, பட்டா, பட்டா—குடி
கெட்டா, கெட்டா, கெட்டா—சீசீ. பட்.

சரணங்கள்.

1.

நாகெட்டுந் நகரங்கடந்து நடக்குதே குதிரை-சல்
நாலுதிக்கும் பார்த்துமகிழ்ந்து-நடிக்குதே குதிரை. பட்.

2.

ஊருகடந்து ஆறுகடந்து ஓடுதே குதிரை-அங்கு
ஒண்டிவீடுகள் கண்டுசென்று-ஒதுங்குதே குதிரை. பட்.

3.

சத்திமங்கல சாலைவழியே ஜாடுதே குதிரை-ஒரு
தண்ணீர்ப்பந்தலைக் கண்டுநின்று- தவிக்குதே குதிரை. பட்.

4.

கள்ளுகடையைக் கண்டுமெத்த கனைக்குதே குதிரை-கொஞ்சம்
கொள்ளுபுல்லில்லாமல் வத்தி-குருகுதே குதிரை. பட்.

5. [அங்குப்

பொண்ணும் கண்ணும் அம்மாய் வீட்டிற் புகுருதே குதிரை-
புகழ்ந்துமகிழ்ந்து இருந்து எழுந்துப்-போகுதே குதிரை.பட.

6.

பெரியோர்களை கண்டாங்காரித்து மீருதே குதிரை-சிறு
பில்லபயல்களோ லேல்லாசித்து-பெலக்குதே குதிரை. பட.

சணுக்கன் சத்திமங்கலஞ் சேரல்.

கீர்த்தனம்.

இராகம் ரீதிகௌளை, ரூபகதாளம்.

பல்லவி.

சத்திமங்கலஞ் சென்முன்-தண்ணீர்ப்பந்தலைக்கண்டான்.

(தண்ணீர் பந்தல் என்றால் சாராய முதலிய வஸ்துகள்,
சில்லரைக்கு விற்கும் கடையாம்.)

அநுபல்லவி.

சத்தப்பட்டாமல் நின்முன்-தாகத்துக்கு வுட்கொண்டான்.

சரணங்கள்.

1.

புல்லா வோர்டம்ளர் போட்டான்
பொருத்து இன்னென்று விட்டான்
கள்ளோர்மொந்தை யடித்தான்
கறிதோசைவாங்கித் தின்முன்" சத்.

(புல்—Full=நிறைய.)

2.

பாட்ள் ஒன்றுவாங்கியே தன்
பாக்கெட்டில் விட்டுக்கொண்டு
பேட்டில் நட்போட்டுக்கையில்
பிறம்பெடுத்தா னுலாவ, சத்,

(பாட்ள்—Bottle—சீசா, பாக்கெட்—Pocket—ஜேப்பு
பெட்டில் நட்—Betel Nut—வெற்றிலைப்பாக்கு.)

3

வேடிக்கையாய் நடந்து
வீதியுலாவு கையில்
ஆடி தள்ளாடி பள்ட்டி
அடித்துவிழுந்தான் கீழே. சத்.

4

பள்ட்டியடிக்கவே தன்
பைகாட்பிரண்டுகள் கையை
ஷொல்ட்டிசொள்ட்டியே சும்மா
கொள்ட்டின் கொடுக்கின்றாரே. சத்.

(பிரண்டுகள்—Friends—சிநேகிதர்)

5.

சும்மாவை வாங்கிக்கொண்டு
அம்மாமார்வீடு சென்றான்
சம்மான அம்மாள்மார்கள்
ஜாடுதெப்பல் கொடுத்தார். சத்.

6.

ஜாடுதெப்பலை வாங்கி
தப்பிப் பிழைத்தேனென்று
ஓடும்போது சருக்கி
ஓர்சாக்கடையில் விழுந்தான் சத்.

7.

சாக்கடை வீட்டெழுந்து
தலைவிறி கோலமாக
ஏக்கத்துடன் தனது
இருப்பிடம்வந்து சேர்ந்தான். சத்.

8.

இப்படியே சிலநாள்
இருந்துப்பொருளழித்து

ஒப்புறப் புறப்பட்டு
உருட்டுசெட்டியூர் சென்றான். சத்.

பொது விருத்தம்.

வாசி மீதேறி சத்திமங்கலஞ் சென்றிருந்து
தாசி வேசிகளோடாடி தனஞ்செலவழித்து சுந்த்ரம்
பாசமா யுருட்டுசெட்டிப் பாளையம் போக மிக்க
ஆசையாய் சாரட்டேறி ஆவலாய்ப் போகின்றானே.

உருட்டுசெட்டிப் பாளையம் பகடை -தாயம்.பச்சீஸ்முதலிய சூதாட்டங்கள் நிறைந்த இடமாம்.

சளுக்கன், உருட்டுசெட்டி பாளையத்துக்கு சாரட்டேறி போகும்போது தானப்பன், செல்லப்பன என்னும் இரண்டு சாரதிகளின் சல்லாபம்.

(தானப்பன் சொல்லுதல்.)

சிங்காரப் பாட்டு.

இராகம் தேசிகம். ஆதிதாளம்.

பல்லவி.

போறானே சளுக்குசுந்த்ரம்
போறானே-போறானே.

சரணங்கள்.

ஊரைவிட்டு நாட்டைவிட்டு
உற்றார் பெற்றாரைவிட்டு
தூரதேசத்திற் சென்று
தொல்லைபட் டலைகதற்கு
சத்தபொன் மணி குலுக்கிட—ரத்நபதக்க மிலங்கிட
சித்ராடையுந் துலங்கிட – மெத்தபவுசு விளங்கிட
இத்தனையுந் தத்தஞ்செய்து
புத்திகெட்டலைந்து வுடல்
வத்திவதிங்கி கஞ்சிக்கு
செத்துகத்தியே புலம்பிட போறா.

(செல்லப்பன் வினவுதல்.)

பல்லவி.

வாருனோ போற இவன்
வாருனோ வாருனோ?

சரணங்கள்.

சீரான செல்வமுள்ள
சீமானிவ னுச்சுதே
ஆரால் நஷ்டமிவனுக்
காகிடுங்காண் சொல்தானப்பா
ஆனைகளுண்டு சேனைகளுண்டு-ஆஸ்தியுண்டு பாஸ்திகளுண்டு
வேணமட்டுந் திரவியமுண்டு-வேலைக்காரர் பலருமுண்டு
தோணவிதமான நல்ல
நாணயத்தோடு டேகின்றானே
எனவனுக் கென்னக்குறை
தானப்பா நீ சொல்லுவாயே. வாரு.

இதவுமதி.

சாரட்டு வண்டியின்மேல்
சவ்வாரிப்போகு மிவன
சீரற்றுப்போவானோ நீர்
செப்புவீரோ தானப்பா நற்
சீமைவண்டி ஜிகுஜிகுளன்கிது-சின்னவண்டிசிறப்பாய்போகுது
சாமான வண்டிசடசடவெனநால்-சக்கரவண்டிதகதகவென்கிது
ஜம்ப்ரமான — செம்பீரமாய்
குமபலோடே போகின்றானே
தம்பியிவ னிப்படிதி
ரும்பிடானோ சொல்தானப்பா. வாரு.

(தானப்பன் சொல்லுதல்)

எந்தெந்த வஸ்திருந்தும்
என்னபலன் இந்தபயல்
தந்தைச்சொல தள்ளிபாய்ந்து
தரிதலையாய்ப் போகிறானே

தாசிகளுக்குந் தரியலருக்கும்—தண்ணிகடை மேஸ்திரிகட்கும்
வேசிகளுக்கும் விலைமாகளுக்கும்—வேடிக்கை யுல்லாசங்களுக்
வெட்டியில் பொருளையெல்லாங் [கும்
கொட்டி கொட்டியே கொடுத்து
கட்டதணிக்கும் வயிற்றுக்
கஞ்சிக்கு மலையப்போறான் போரு.

இதுவுமது.

உருட்டுசெட்டி பாளையத்துக்
கோடுகின்றான் போய்ப்பகடை
உருட்டி தன்பொருட்களை
விரட்டுவான்பார் செல்லப்பா
உருளுதுவண்டி கடகடவென்று-ஓடுது குதிரைபடபடவென்று
தெருளுதுமுகமுந் திகுதிகுவென்று-சீர்றான்கிடந்து சிடுசிடு
சீரழிவான் சின்னப்படுவான் [வென்று
செருக்காய்நின்று முருக்காய்ப்பார்த்து
கூர்றான்வசைகள் குலைக்கிறான்சினந்து
குடிகெடுவானிவன் தடியாய்துடித்து. போரு.

(செல்லப்பன் சொல்லல்.)

சீ - சீ - இவனையொரு
சீமானென்று நினைத்தேன்
சீதாவதியிவன் பவுசு
துலங்க விளங்கிப்போச்சு
தூ-தூ-தூ-தப்புசெட்டப்பயல்-சுட்டிசுட்டி தஷ்டசிறுபயல்
தாய்தந்தைக்சடங்காத மடப்பயல்-தடிப்பயலா மிவனடிபடும்
சற்சனர் நேசமில்லாத [மாடு
துற்சனன் இவன்களுக்கு
அர்த்தநாசம்,அர்த்தநாசம்
அர்த்தநாசந்தான் வாறானே வாரு.

(தானப்பன் சொல்லல்.)

வந்தாலு மென்ன இவன்
வரிசை கெட்டுருயாறி

கந்தைத்துணியுங் கரி
வேஷத்துடன் வருவான் [த்திடும்
சண்டனமான தண்டனைய துகளை-மிண்டதால் வெருண்டுபகை
வண்டத்தன ஜண்டிகளுக்கு-ரண்டகமிருந்து கெடுத்திடும்
வாராதிராது தன்பம்
நேராதிராது கஷ்டம்
சேராதிராது சள்ளை
செல்லப்பா சொல்லப்பா நீதான் போரூ.

சளுக்கன் உருட்டுசெட்டி பாளையஞ்சேருதல்.

கீர்த்தனம்.

இராகம் துசாவந்தி, செம்படைத்தாளம்.

பல்லவி.

உருட்டு செட்டியூர் சென்றான்—பகடை
உருட்டுவோரை யங்குக்—கண்டான்,

அனுபல்லவி.

இருட்டி விடியுமட்டும்—இருந்தப் பகடை சும்மா
உருட்டியுருட்டி கை—ஓயப் போகிறான்.

சரணங்கள்.

1.

போடுபகடை பன்—ரண்டெட்டு ஓ-ஓ
போசசுதிவ்வாட்டம்—எனைவிட்டு
ஆடுவோமனம—உனமட்டும-எம்தா
ஆனதாகிவந்து—முடியட்டுமென. உருட்.

2.

குடிகுடியெனவே—குடித்தான். அந்த
குடிவெறியால்—தடிதடித்தான்
விடியவிடிய—உருட்டிட்டான்-பணம்
முடிய முடிய—தோர்த்திட்டானவன். உருட்.

3.

கொட்டி கொட்டி பணங்—கொடுத்தான்-பையை
தட்டி தட்டி—சாக்கில்விடுத்தான்
வெட்டியில் பணங்களை—யிறைத்தான்-பின்னும்
இஷ்டத்தை யதின்மேலே—நிறைத்தானவன் உருட்.

4.

பட்சமாயெழுந்துப்—போனான்-அங்கு
பச்சிஸாடுவோரைக்—கண்டான்
மிச்சபணத்தை—யங்கு ஈந்தான்-ஈந்து
வெறுங்கையோடு—வீடுசேர்ந்தானவன் உருட்.

5.

வீட்டைநோக்கியே—வந்தான்-வந்து
வீதியுலாவி—திரிந்தான்
சீட்டாடுவோர்களைப்—பார்த்தான்-அதில்
சேர்ந்து வெகுபணத்தைத்—தோர்த்தானவன் உருட்.

விருத்தம்.

இவ்விதமாய் வெகுபணத்தை வீணில்போக்கி
இருப்பதையு மழிப்பதற்கு ஈனபேயன
ஒவ்வொன்றிலும் வீண்செலவே செய்தானல்லால்
ஒருகாசு மிவன்லாபங் கண்டதில்லை
அவ்விதமானலு மஞ்சா னெஞ்சங்கொண்டு
ஆனைபரிவார ரதசேனை யோடு
செவ்வைபல்லக்கேறி சிரமுண்டிதஞ் செய்
சிரஞ்சீவி நகர்தனக்குச் செல்கின்றானே.

சிரஞ்சீவி நகரமென்றால் அவ்வூரைச்சார்ந்துப்போகும் யாவரும் தங்களுக்குள்ள தஉரியது யாவையுந்தோற்று தலைமொட்டை யடிப்பட்டு வரவேண்டியதால் அப்பெயர் வந்தது.

சளுக்கன் பல்லக்கு ஏறி கொடி சிரஞ்சீவி நகருக்குப்
போகும்போது, இனி இவனுக்குவரப்போகிற
ஏக்கத்தைக்குறித்து போகிகள்
பேசிக்கொள்ளும் விதம்.

போகிகள் பாட்டு.

பல்லவி.

ஏக்கம் ஏக்கம்— ஏக்கம் ஏக்கம்.

சரணங்கள்.

1.

ஏகபோகம்—ஏக்கம்-ஏக்கம்
வேகமாக—ஏக்கம்-ஏக்கம்
யோகமபோகும்—ஏக்கம்-ஏக்கம்
சோகமாகும்—ஏக்கம்-ஏக்கம். ஏக்.

2

சளுக்குசுந்த்ரம்—ஏக்கம்-ஏக்கம்
கொழுத்துப்போறான்—ஏக்கம் ஏக்கம்
பழுக்கச்சாத்தி—ஏக்கம்-ஏக்கம்
வெளுப்பார்பாரேன்—ஏக்கம்-ஏக்கம். ஏக்.

3.

இவனுட ஆஸ்தி—ஏக்கம்-ஏக்கம்
எல்லாம்நாஸதி—ஏக்கம்-ஏ கம்
அவமானங்கஸ்தி—ஏக்கம்-ஏக்கம்
ஆதுமேஜாஸ்தி—ஏக்கம்-ஏக்கம் ஏக்

4.

சிரஞ்சீவிநகரம்—ஏக்கம்-ஏக்கம்
சேர்ந்திடுமுன்னம்—ஏக்கம்-ஏக்கம்
அனைவாசிபொருளை—ஏக்கம்-ஏக்கம்
ஆக்கினன்கொள்ளை—ஏக்கம்-ஏக்கம். ஏக்.

5.

சோலுங்குடிவையாய்—ஏக்கம்-ஏக்கம்
குந்திடபோறான்—ஏக்கம்-ஏக்கம்

தோளுமெலும்புமாய்——ஏக்கம்-ஏக்கம்
சுண்டிடபோமுன்——ஏக்கம்-ஏக்கம். ஏக்.

6.

தந்தையின் மனது——ஏக்கம்-ஏக்கம்
தனலாயெறிய——ஏக்கம்-ஏக்கம்
வந்ததுரோகி——ஏக்கம்-ஏக்கம்
வாழ்வடைவாரோ——ஏக்கம்-ஏக்கம். ஏக்.

7.

சிறந்தவிசமாய்——ஏக்கம்-ஏக்கம்
சிவிகையிலேறி——ஏக்கம்-ஏக்கம்
சிரஞ்சீவிநகரம்——ஏக்கம்-ஏக்கம்
சேர்ந்தனன்பாரே——ஏக்கம்-ஏக்கம் ஏக்.

சளுக்கன் சிரஞ்சீவி நகர் சேருதல்.

கீர்த்தனம்.

இராகம் நாடிப்பண், ஆதிதாளம்.

பல்லவி.

சிரஞ்சீவிநகர்சேர்ந்தனன்——சளுக்கு சுந்த்ரம்
சிரஞ்சீவிநகர் சேர்ந்தனன்.

அநுபல்லவி.

அருந்தவன் தனசுந்த்ரம்
பகிர்ந்த பொருளைச் சேர்த்து
சிறந்தவிதமாகவே-சளுக்கு சுந்த்ரம்
நிறைந்த சந்தோஷமாகவே. சிரஞ்.

சரணங்கள்.

மகுடத்தோரணங்கட்டினர்——தெருவிலெங்கும்
வாழைத்தருக்கள் நாட்டினர்
தகுந்த பன்னீர்தெளித்தனர்——மல்லிகை முல்லை
சம்மங்கி மலர் தூவினர்.

மிருந்த சங்கீதவாத்ய
மேளதாளங்களோடு
புகழ்ந்து ஆர்ப்பரித்திடவே—சளுக்கு சுந்த்ரம்
மகிழ்ந்து எக்களிப்புடனே. சிரஞ்.

2.

ஆனைசேனைகள் சூழவே – கண்டோர் கேட்பர்
அரசனென மதிக்கவே
நாணயமாய்ச் சிறக்கவே – நாலண்டையும்
கற்றுவஜம் பறக்கவே
ரதகஜ துரகப
தாதிகளுடன் மிக்க
நடினபெண்டுக ளாடவே – சளுக்கு சுந்த்ரம்
ராஜகோலம தாகவே. சிரஞ்

3.

மங்களங் கூறினர்கள்—கவிஞர் பலர்
மலர்மாலை சூடினர்கள்
சங்கீதம் பாடினர்கள்—கன்னிகைகள் வெண்
சாமறை வீசினர்கள்
சங்கு முழக்கினர்கள்
எங்கு விளக்கினர்கள்
சாமிபாரக் கெனவே—கட்டியக் காரர்
சாற்றி யெச்சரித்திடவே. சிரஞ்

சளுக்கன் சிரஞ்சீவி நகரில் தனக்கென்று கட்டுவித்த மாளிகையின்சிறப்பும் அதிலவன்பிரவேசித்திருத்தலும்

கீர்த்தனம்.

இராகம் பந்துவராளி, சாப்புதாளம்.

பல்லவி.

மாளிகையொன் றலங்கரித்தனரே—மிக
வசதியுறவதை ஜோடித்தனரே.

சரணங்கள்.

1.
கேளிக்க முருவாழை—சோலைகள்சூழ் - ஜலக்
கிரீடைசெய் கேணிமுத—லானது நீழ். மாளி.

2.
ஆளன் சளுக்குசுந்த்ரம்—வாழ்ந்திருக்க-பேர்
அதிசயமென் றெவருந்—தானுரைக்க, மாளி.

3.
சுவரில் லீலாவிநோத—சித்ரந்திட்டி-மிக்க
சுகந்தமல ராரங்கள்—தூக்கிமாட்டி. மாளி.

4.
வன்னவன்ன கண்ணாடி—சட்டப்படம்-வைத்த
வரிசை யெவரும்பார்க்க—மெத்தத்திடம். மாளி.

5.
லஸ்தர் குளோபுகள் ஷேட்—லாந்தர்களும்-வால்
லாம்புகளான பல—தீபங்கள். மாளி.

6.
ரத்தின கம்பளம்—விரித்தனர்கள்-சோபா
நாற்காலி மேசைக்கட்டி—லிட்டனர்கள். மாளி.

7.
பன்னீர் சந்தனகந்த—வர்க்கமிக்க-நல்ல
பரிமள வீசியெங்—கெங்குமிருக்க. மாளி.

8.
இவ்வாறலங்கரித்த—மாளிகையில்-சேர்ந்
திருந்தான் சளுக்குசுந்த்ரம்—கேளிக்கையில். மாளி.

போது விருத்தம்.

இந்தபடி புதுமனை சேர்ந்திருந்தான் சுந்த்ரம்
 என்றுனும் இன்பமில்லையே யென்றேங்கி
சிந்தனை செய்யாதானென்ன செயலாமென்று
 செயவேண்டியது தோன்றிற் றென்னவென்னில்
தந்தையகம் விட்டுவந்த பிறகுசேர்ந்த
 தன்னை சத்தரி தலைகள் தாசிமாரும்
வந்திடவே அழைப்பதெனத் தீர்மானித்து
 வரைந்திட்டான் நிருபமொன்று வரைந்திட்டானே.

சளுக்கன் தன் சிநேகிதர்களுக்கு நிருபமெழுதல்.

விருத்தம்,

எனததிகப் பிரியமும் பட்சமு மேன்மையும்
என்னுயிர்க் குயிருமான
இஷ்ட நேயர்களெனும் இனதுரோகி பிள்ளையும்
இடைவிடா குடிமுதலியும்
மனவிடா முடாக்குடிய நாயுடும் மிகுநய
வஞ்சகராச் சாரியவரும்
மற்றும் பீப்பாய்க் குடியன் வழிபரிசெய்தாசரும்
வாய்ச்சாலர் மதிமோசரும்
தனக்கொள்ளை பிரபுவும் சாப்பாட்டு ராமரும்
தலைதட்டி ஜெயவந்தரும்
சாசரஞ்சினி மதனக்குஞ்சரிட் பசுப்புசுந்
தரிதன முறுஞ்சினியுடன்
இனும்பிரிய லேடிகள் ஜெண்டிலமென் யாவரும்
இன்பமிககொண்டுகொண்க
இஷ்டனுன் சளுக்குசுந்திர மிகவுவந்தித்து
எழுதியே விடுக்கு நிருபம்
கனவிலும் நினைவிலும் எப்போதும் நீங்களென
கண்ணின்முன் நிற்கின்றீர்கள்
காண வபிலாசைகொண் டென்னசெயலா மெனக்
கருதியது என்ன வெனிலோ
தினமென்து மனையினில்·டின்னர்பார்ட்டிகள் வைத்து
திரட்டியுமை யிங்குசேர்த்து
தின்டாடிக் கொண்டாடி-சீட்டாடிக் கூத்தாடி
திகழ்க் காலக்ஷேபஞ்செய்ய
வனமடரு பெனதுடைய-மாளிகையை ஜோடித்து
வசதியுற செய்தறுசுவை
வகை பதார்த்தங்களும்-சீர்மைத் தண்ணீர்களுடன்
மாபந்திசெய் தின்றைக்கும்
கனிவான வருகைக்கு-கண்பூக்கப் பார்த்துநான்
காத்திருக்கின்ற சாலே
கண்யமுடன் வந்தெனது·கவலை தீர்ப்பீர்களெனக்
கழரு விண்ணப்பமிதுவே.

சிநேகிதரின் மறுமொழி.

விருந்தம்.

மகராஜ ராஜஸ்ரீ மாகனந் தங்கிய
  மாணுலவுங் குணமோங்கிய
மதிவதன முறுமெமது அருமைசேர் நேசரெனும்
  மகிபனே சளுக்குசுந்தரம்
வாஞ்சித்து நீர்விட்ட நிருபமெங் கட்கரம்
  வந்துசேர்ந்தது வதற்கும்
மனமகிழ முகமலர அங்கம் பூரித்திட
  வந்தித் தெழுதுவசெதனில்
திகழுமந் நிருபத்தை சென்னிமேல்வைத்தனம்
  செங்காத் தேங்கிமுத்தனு
செய்தனங் கண்களில் ஒத்தினோ மெச்சினோம்
  திருப்பித் திருப்பிப் பார்த்தோம்
சேரிக்கு சேரியாய் ஓடினோம் செய்திகளை
  சிநேகர்க்குச் செப்பிவந்தோம்
திரும்பினோம் எங்கள்கலி தீர்ந்ததென்றோம் பல
  ஜெண்டில்மென் லேடிகளுடன்
தொகையாக சேர்ந்தொரு கூட்டமாய் வருகிறோம்
  துலை தூரமானதாலே
சுருக்காய் நடந்திட லேடிகள்தவிக்கிறார்
  ஜோடி வாகனங்கள்பூட்டி
துரிதமாய்க் கோச்சு சாரட்டு டாக்கார்ட்டுகள்
  சுப்பீரியர் பைசிக்களுடன்
ஜோக்காக எற்குதிரை சாட்ல் அண்ட் ப்ரைடிலும்
  ஜோடித் தனுப்பவேணும்
வெகுவான விரைவுடன் வருவதா லிவையெல்லாம்
  வேண்டுவது அவசியமலோ
வெயிலேறி போமுனும் அந்திசேர்ந்திடுமுனும்
  வேசாருண்டாகு முன்னும்
வெள்ளெனவேவந்து மதுமலர்முகம்பார்த்திட
  வேணுமென்றாவலுற்று
வேகமாய்த் தாகமாய் ஏகமாய்க் கோரியாம்
  விளம்பு மறுமொழியிதாமே.

போது விருத்தம்.

மறுமொழி வந்தெட்டினதும் சளுக்கு சுந்தரம்
மகிழ்ந்தெழுந்து இங்குமங்கு மோடியாடி
பரபரப்பாய் ஜோடிபரி பூட்டி பீட்டன்
பண்டியுடன் கோச்சுவண்டி சூட்சவண்டி
சுருசுருப்பா யாஜர்செய்து வனுப்பிவிட்டு
சுற்று முற்றுமாய்ப் பார்த்துத் திரிந்தலைந்து
குறுகுறென ஏங்கி கண்கள் பூத்துப்போய
கொக்குபோல் காத்துக்கொண்டு நிற்கின்றானே.

சிநேகர் வரவு.

ஓரடி மயங்கிசைசிந்து.

வருகுதப்பா வருகுது-வருகுதப்பா வருகுது வண்டிவருகுது
மடமடவென வருகுது-கிடுகிடுவென வருகுது
தடதடவென வருகுது-சடசடவென வருகுது
மட்டக்குதிரையை மாட்டிக்கொண்டு-மாஞ்சிமாஞ்சி வருகுது
ரட்டைகுதிரைகள் பூட்டிக்கொண்டு-நீஞ்சிநீஞ்சி வருகுது
மாட்டுவண்டி வருகுது-சாராட்டுவண்டி வருகுது-டாக்
கார்ட்டுவண்டி வருகுது-பீட்டின்வண்டி வருகுது
பெரியவண்டி வருகுது-சின்னவண்டி வருகுது
பெட்டிவண்டி வருகுது-கட்டை வண்டி வருகுது
கோச்சுவண்டி வருகுது-சூட்சவண்டி வருகுது
சாமான்வண்டி வருகுது-ஜட்காவண்டி வருகுது
சாரிவருங் குதிரைகளின் சத்தமிகக்கேட்குது
சாதிகள் பாடுகின்ற- சங்கீதமும் கேட்குது
செந்தூள் பறந்திடவே-சீக்ரம் சீக்ரம் வருகுது
கருந்தூள் பறந்திடவே-கடியகடிய வருகுது
சிட்டாய்ப் பறந்துக்கொண்டு-சேர்ந்துசேர்ந்து வருகுது
காத்தாய் பறந்துக்கொண்டு-கடசடவென வருகுது
குதிரைகளும் ஒன்றாய் கூடி-கும்மாளித்து வருகுது
குட்டிகுதிரை குதித்துகொண்டு-கோணிகோணி வருகுது
பெட்டைகுதிரை கனைத்துக்கொண்டு-பேரிடிபோல் வருகுது
சங்கதி வந்தெட்டினது-சளுக்சளுக்கு அப்போது

அங்கிருந்த சளுக்கு சுந்த்ரம்- அங்குமிங்கு மோடுறான்
ஆளுகளை நோக்கிபார்த்து-ஆச்சாபோச்சா யென்கிறான்
டீனி தயாருசெய்ய-திடுதிடென்று ஓடுறான்
டேமைசைப் போடசொல்லி-திட்டிதிட்டி ஜாடுறான்
தண்ணீர் தயாருசெய்ய-தலைதெரிக்க வோடுறான்
வெந்நீர் தயாருசெய்ய-வேகமாகப் போகிறான்
எல்லாவற்றையுஞ் செய்துவிட்டு-எட்டியெட்டி பார்க்கிறான்
இன்னுவரா காணோமென-ஏங்கியேங்கி நிற்கிறான்
தேங்கிதேங்கி நிற்கிறான்-எக்கியெக்கி பார்க்கிறான்
முக்கிமுக்கி பார்க்கிறான்-முழிச்சிமுழிச்சி பார்க்கிறான்
குனிந்துகுனிந்து பார்க்கிறான்-நிமிர்ந்துநிமிர்ந்து பார்க்கிறான்
குந்தி குந்தி பார்க்கிறான்விந்திவிந்தி பார்க்கிறான்
பார்த்துக்கொண்டிருக்கும்போது-பண்டிவர கண்டிட்டான்
பண்டிவர கண்டவுடன்-பல்லைபல்லைக் கெஞ்சுறான்
ஹல்லோ ஹல்லோ-என்கிறான்
ஊருபட்ட பேர்களொரு-மிக்கவந்து கூடினார்
பேருபெற்ற இனதுரோகி-பிள்ளையு வந்திறங்கிட்டார்
எற வறதடித்தமே-விடாகுடியரும் வந்துவிட்டார்
முடாக்குடியரும் வந்துவிட்டார்-முழுகுடியரும் வந்துவிட்டார்
வாய்ச்சாலகர் வந்து விட்டார்-வழிபிரிப்பவர் வந்துவிட்டார்
மதிமோசரும் வந்து விட்டார்-வஞ்சகாச்சாரியார் வந்துவிட்டார்
தனக்கொள்ளை பிரபுடனே-தலைதட்டியார் வந்துவிட்டார்
சாப்பாட்டுராமரும் வந்துவிட்டார்-பீப்பாய்குடியர் வந்துவிட்
பெருங்குடியர்கள் வந்துவிட்டார் (டார்
காடிகளை விட்டிறங்கி-லேடிகளும் வந்துவிட்டார்
பாடகளும்வந்துவிட்டார் கூத்தாடிகளும வந்துவிட்டார்
தனமுறாஞ்சினி வந்து விட்டாள்-மதனகுஞ்சரிவந்துவிட்டாள்
சரசாஞ்சினி வந்து விட்டாள்-பசப்புசுந்தரி வந்துவிட்டாள்
சளுக்குசுந்திரங் கைபிடித்து-குலுக்கிகுலுக்கி யாட்டுறான்
இளித்திளித்து சிரித்துப்பல்லை-யெல்லோருக்குங் காட்டுறான்

இந்தவிதம்-எல்லோரையும்
ஏகமாக சேர்த்துக்கொண்டு
மாளிகைக்குள்-சென்றனனே சளுக்குசுந்திரம்
மாளிகைக்குள்-சென்றனனே.

வெண்பா.

வந்த விருந்தினரை மாளிகையிலே சேர்த்து
சந்தோஷமுற் றிதயந்தான் குளிர்ந்தான்—சுந்திரம்பின்
வேகத்துடனெழுந்து வேணவித மானதனை
பாகவிருந் தளித்தான் பார்.

சளுக்கன் சிநேகிதருக்கு விருந்தளித்தல்
கீர்த்தனம்.

இராகம் நாட்டை, அடதாளம்

பல்லவி.

டின்னர்கள் வந்ததப்பா—விருந்தினர்க்கு
டின்னர்கள் வந்ததப்பா—அப்பப்பா.
(டின்னர்—Dinner—உணவு—சாப்பாடு)

அனுபல்லவி.

வன்னவன்னமான பல—வகைப்பதார்த்தங்களாக
இன்னதென் றுரைக்கவென்றால்—ஏலாதுகளபாக. டின்.

1.

சரணங்கள்.

சூப்பு டர்க்கி ரோஸ்ட்டு—கேப்பன் பேர்ஹாம் ரவுண்டு
பீப்பு மவையுடனே—ஷாப்புடின் மீன் வகையும்
சாப்சுடனே பாயில்மட்டன்—சேப்பர்சு நல்சாசுடக்கு
சல்மியும் சிக்கின்கனேலா—பல்வகைகைடிஷுடனே டின்.

2.

கீச்சிமிகுந்தரோல்—பிரஞ்சி ஜெல்லி புல்மாஞ்சி
டச்சிப்பிரப்பரேஷன்—மின்சியது வல்லாமல்
பச்சரிசி கிசடியும்—பச்சடி பிலவுமாக
உச்சிதவிதங்களான—உணவெனும் பல பல. டின்.

3.

சுண்டைவத்தல் பொறியல்—வெண்டை பாகல் வசங்கல்
தெண்டை மெளுத்தி சுண்டா—தண்டையூறிக்காயுடன்

உண்டைக்கறி கோழிக்கறி—உயர்ந்த இஸ்டியுகறி
பண்டைப் பருப்புரசம்—பரங்கிக்காய் சுண்டலுடன். டின்.

4.

ரம்பியர் வுசிக்கி—ஷம்பெயின் பிராண்டி
யும்கிளாரட்டுக்கப்—பும் வைன் வகைகள்
ஜிம்மென்றெழும்பும் சோடா—ஜின்னு மதோரா போர்ட்டர்
லெம்னெயிடும் பட்டை பத்தாய்—நீலகிரி பியருமாக. டின்.

5.

சோலிபோலி புடிஙும்—ரொட்டி வெண்ணெயுஞ் சீசும்
ஜாலியன்கேக்குகளும்—சுகந்தச் சாக்லெட்டுகளும்
வாழைப் பலாவுமாங்காய்—மாங்கிஸ்டின் ஆரஞ்சிகொய்யா
பாலேவால்நட்டுகளும—பற்பலபழங்களுடன். டின்.

விருத்தம்.

டின்னர்களருந்தியெல்லாம் சித்திரவரைக்குட்சென்றார்
இன்னர வீணைவாத்யக் கீதங்களுடனேயந்த
கன்னியர் ஆடிபாடிக் காலநற்க்ஷேபம்செய்ய
மன்னியே சளுக்குச்சுந்த்ரம்—வருந்தினான் வருந்தினானே.

சரசாஞ்சினி முதலிய லேடிகள்கூடி கும்மியடித்தாடல்

கும்மி.

4.

கும்மியடிபெண்கள் கும்மியடி—நீங்கள்
குனிந்துநிமிர்ந்து கும்மியடி
நம்முறிசளுக்கு சுந்த்ரமுதலியை
நாடிபாடிநீங்கள் கும்மியடி.

2.

அம்மியவர்தலே அம்மியடி—மிள
காயரைத்திடநல் அம்மியடி
செம்மையாய்க்கூடி குலாவியவர்சிரம்
தேயமிளகா யரையுங்கடி

3.

சளுக்குசுந்திரம் தான்மகிழ்ந்து—மிக
சுளுக்குக்கொண்டிட வுங்கைவளை
கிளுக்குக்கிளுக்கு என்றுசப்தித்திட
குலுக்கிக்குலுக்கிக் கும்மியடி.

4.

தண்ணியடிக்கார சாமியடி—அவன்
தனமெல்லாம்நம தாகுமடி
எண்ணியெண்ணுமற் பணங்கொடுப்பார் நீங்கள்
இளைத்திடாமலே கும்மியடி.

5.

அம்மாள்மாருக்கு அடிமையவன்—நல்ல
ஆசாரமவர்க் காகாது
சும்மாபுளுகிடும் அம்மாவார்த்தைகள்
சொர்க்கமவர்க்கடி தோழிபெண்காள்.

6.

மாதர்கள்காலைப் பிடிப்பாண்டி—ஒ நம்
போதகர்காலை யொடிப்பாண்டி
பாதகர்சொல்லும்பொய்ப் போதகவார்த்தையைப்
பால்யோலுறுஞ்சிக் குடிப்பாண்டி.

7.

தாசிகள்மாரைப் பூசிப்பாண்டி—உப
தேசிகள்மாரைத் தூஷிப்பாண்டி
வேசிகட்குத்தன்னை விற்பாண்டிநல்ல
யோசனைகளை மிதிப்பாண்டி.

8.

காலைப்பிடித்துக் கலைப்பயின்று—கொஞ்சம்
கற்றதம்கற்பித் தத்தன்குருவின்
மேலேகுதறச்சொல்லி திரியும்வீணரில்
வீணனிவனடி தோழிபெண்காள்.

9.

நூலைப்பயின்றிட நாறுவிசைக்—காலில்
நுழைந்துகும்பிட்டு கற்றுதரு
காலையொடித்திட எண்ணுங்கயவர்போல்
கசடனிவனடி தோழிபொண்காள்.

10.

பெண்சாதிபேச்சதை மெச்சிக்கொள்வான்—நல்ல
பேரறிவென்று பிடித்துக்கொள்வான்
பண்பானஞானிகள் சொல்லுநற்புத்தியைப்
பகையென்றுசொல்லுவான் தோழிப்பெண்காள்.

11.

நல்லோர்க்கூட்டத்தை நாடாமல் — அற்ப
பில்லப்பயல்களைப் பின்தொடர்ந்து
தில்லுமல்லும்புரிந் தல்லுமெல்லுந்திரிந்
தல்லல்படுபவன் தோழிபெண்காள்

12.

ஞானிகள்கூட்டத்தி னின்றெழுந்து—பெரும்
ஞானவன்போல பிதற்றிடுவான்
ஏனென்றுகேட்டிடில் தூஷித்தவர்களை
எக்கச்சக்கஞ்செய்வான் தோழிப்பெண்காள்.

13.

ஞாயத்தைப்பேசுங் குருமாரை—சீறி
நாய்போல்குரைத்துவிட் டோடிபுறம்
போயவன்தன்மனம போலநடந்திடும்
போக்கிலிபையன் இவன்தாண்டி,

14.

தன்னுடகுற்றத்தை யெண்ணமற்—பிறர்
தங்களைகுற்ற முடையாரென்று
பன்னிபன்னிபின் புறணிகள்பேசிடும்
பாவியிவனடி தோழிபெண்காள்.

15.

தன் சகப்பனையும் வீட்டையும் விட்டு—மா
தரி சாலையாகத் தான் திரியும்
நன்றிகெட்டப்பயல் இன்றைக்கு ஆகிலும்
நலமபெறுனேடி தோழிபெண்காள்

16.

சொந்தசகப்பனை வீட்டை நினைந்து
சுருக்காயெழுந்திவன் போகாவிட்டால்
வந்திவனுக்கு மோசமும் நாசமும்
வாராதிராதடி தோழிப்பெண்காள்

17.

எந்தக்கேடோகெட்டுப் போறான்டி—நமக்
கென்னகுறையுண் டதனாலே
வஞ்சக்காரியம் நமக்குகைக்கூடிட
வளைந்துவளைந்துக் கும்மியடி.

சளுக்கன் சொல் வசனம்.

ஆ. ஆ. மெச்சநேர்த்தி, மெத்தநேர்த்தி. என் மனதிற் கிசைந்த மாது சிரோமணியாகிய சரசரஞ்சனி; நீ மெத்தவும் சமர்த்தி நீ யென்மீது வைத்திருக்கும் நேசபாசத்தினால் எனக்கு நிந்தாஸ்துதியாகப் பாடிவந்த கும்மி எவ்வளவு இனிமையு மலங்காரமுமா யிருக்கிறது இவ்விதமா யென்னை வர்ணித்துப்பாட யாருக்குத்தெரியும்? நம்ம கவிராயன் இ. சி. ம. இலாசர் ஐயருக்கு என்தலையை அம்மிகல்லாக்கி மிளகாயரைக்கத்தெரியுமா? அவனுக்கேது இந்த ஞானம் அவனுக்கு, ஆங். ஊங். சென்றால் சுவிசேஷந்தான் கெதி. நீயோ; என்தலையை கல்லில் அம்மிக்கல்லாக மதித்தாய். ஆ. ஆ. என்ன சமர்த்து; நீ மிளகாயுமரைப்பாய், வேணுமானால் மசாலைகளையெல்லாம் சேர்த்துமரைப்பாய். பேஷ், பேஷ் பலேபேஷ், மெத்த சந்தோஷம். அன்றியும் நீ சிறுவயசில் படித்துக்கொண்ட, அவன். இவன், உவன், அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன், என்னும் இலக்கணவாசகம் உன்னாவினின்றகலாமல், கல்லின்

மேலெழுத்துபோல் மறையாதிருப்பதும் மெத்த ஆச்சரியம் நல்லது, இப்பொழுது ஒரு பால் (Ball) ஆட்டம் ஆடுகிறகள் பார்ப்போம், அதற்கு நமது மிஸ் (Miss) தனமுறுஞ்சினி சங்கீதம் பாடட்டும்.

கீர்த்தனம்.

இராகம்-காம்போதி, இங்கிலீஷ் மெட்டு, ஆதிதாளம்.

பல்லவி.

தத்தித்தோம்— ததிங்கணத்தோம்
தளாங்குத்தோந்தரி — தரிகிட திககிட.

அநுபல்லவி.

தத்திஜணுதிமி — தந்தரிநா தரி
தகிர்ததளாங்கு — தளாங்குதோந்தரி.

சரணங்கள்.

1.

தருகத்தவமெத் — தவுமூத்தியவுக்
தமசற்குணமுற் — றிடுவித்தகனெனும்
சந்திரவதனச் — சளுக்குச்சந்திரம
சந்ததநிந்தை — மிதந்துநிறைந்திட.— தத்-

2.

சளுக்குசுந்திரம் — தாழ்ந்திடவும்
சந்ததம்நேசர்கள் — வாழ்ந்திடவும்
கொழுக்கத்தின்றப் — பொருள்பரித்து
பழுக்கச்சளுக்கனை — வெளுக்கப்பார்த்திட — தத்.

3.

லேடிகள்நாங்களும் — நீடிடவும்
நிறையபொக்கிஷமதைத் — தேடிடவும்
ஆடியோடிசளுக்கு — சுந்திரங்
காடிகஞ்சித் — தேடிதிரிந்திட.— தத்.

சனாக்கன் வசனம்.

பலே. லே, பலே, பேஷ், எனதாசைக்குரிய நேசகியாகிய மிஸ், தனமுறுஞ்சினி! நீயு மெத்தக் கெட்டிக்காரி கோடையிடியிடித்துக் குமறினாற்போலும் புகைவண்டியின் சக்கரங்கள் உருளுவதுபோலும் மடமடவென்று இவ்வாறப்பாடி எனக்கு நிந்தாஸ்துதி செய்தாய், மிக நன்றியறிதலுள்ளவனாயிருக்கிறேன். என்பேரில் உங்களுக்கிருக்கிற நேசமும் பாசமுமல்லவா இவைகளால் வெளியாகிறது மெத்த மெத்த சந்தோஷம். இவைகளுக்கு ஈடாக நான் உங்களுக்கு என்னத்தை செலுத்தவேன் ஒன்றுமில்லையென்றாலும் நானே உங்களுடையவனாயிருப்பதால் ஒன்றுக்குங் கவலைப்படமாட்டீர்களென்று நம்புகிறேன.

லேடிகள் வசனம்.

எங்கள் பிரியரே!

என் அப்படி சொல்லுகிறீர்கள் உங்களுடைய அன்பே. எங்களுக்கு இன்பம். உங்களுடைய பட்சமே எங்களுக்கு லக்ஷம் தாங்கள் சொல்லும்போல தாங்களே எங்களுக்கு சொந்தமானவராயிருக்கச்சே எங்களுக்கென்ன குறைவு இம்மட்டில் எம்மாத்திரமோ பெற்றிருக்கிறோம் இன்னும் இருக்கிறவைகள் எங்களை விட்டெங்கே போகப்போகுது. ஆயாசப்பட வேண்டாம் வந்தனம்.

விருத்தம்.

சுந்திரம்வஞ்சகராலே சூழப்பட்டு
சொக்கமதிமயங்கி யவர்செய்யும் பொல்லா
தந்திரங்கள் தெரியாம லிருக்கும்போது
தன்றகப்பன் றனையறிந்தப்பெரியோர்கண்டு
வந்தவனுக்கினிவரப்போம் மோசநாசம்
வருமைதுயர்ச்சிறுமையதை யெடுத்துக்காட்டி
இந்தமதிவேண்டாம் போய்வீடுசேரென்
றெச்சரித்துபுத்திமதி யியம்பினாரே.

கீர்த்தனம்.

இராகம் பைரவி, ஏகதாளம்.

பல்லவி.

சுந்திரம் இச்சபுத்திவேண்டாம்—சனுக்கு
சுந்திரம் இச்சபுத்திவேண்டாம் உந்தன்
சொந்தப் பொருளும்பேரும்
அலைந்திடவே தேண்டா—அடேசுந்.

சரணங்கள்.

1.

நீ, வந்தது எவ்வளவோநேர்த்தி—இனி
நொந்து நீயலைவாயானால்-எத்தனை துற்கீர்த்தி அடே.

2.

செட்ட, துஷ்டப்பயல்கள் சகவாசம்—செய்தால்
மொட்டையடித்தேகிடுவார்—முற்றிலுநீநாசம் அடே.

3.

பொல்லா, தாசிகள் நேசமெதுக்கேடு—உன்றன்
காசியைப்பறித் துன்கையில்-தந்திடுவார் ஓடு. அடே.

4.

விலை, பெண்டுகள்மேல் மினுக்குவிந்தை—அவாள்
கொண்டையிலிருப்பதெல்லாம்-கம்பளியின்கந்தை. அ.

5.

பாழும், வேசிமார் தங்களுடன் ஸ்நேகம்—செய்தால்
வேகமாய் பிடித்திடமே-வெள்ளை மேகரோகம்; அடே.

6.

பேரும், ஆழப்படுகுழியாம் வேசி—யென்று
சாலோமோன் ஞானியர்சொன்ன-சத்தியத்தையோசி. அ

7.

அடே, தையற்சொற்கேளே லென்றையோ—ஔவை
தாயாருனக்குரைத்த-வாசகமும் பொய்யோ. அடே,

சனுக்கன் தனக்குபுக்திசொல்லும் பெரியோரிடம் கேட்கும் கேள்வி வசனம்.

ஐயா பெரியோர்களே; தாங்கள் இப்போது சொன்ன அந்த சுலோகத்தின் தாற்பரிய மென்னவென்று சற்றே சொல்லுங்கள் பார்ப்போம்.

பெரியவர்.—ஸ்திரிகளுடைய வார்த்தைகளைக் கேளாதே என்பதுதானப்பா அதன் கருத்து.

சனுக்கன்.—சரி, அப்படிசொன்ன, அந்த ஔவை ஆண்பிள்ளையா? அல்லது பெண்பிள்ளையா?

பெரியவர்—பெண்பிள்ளை தானப்பா.

சனுக்கன்.—ஆ! ஆ! அப்படியா? சரி அப்படியானால் நான் அந்தப் பெண்பிள்ளையினுடைய வார்த்தையைக் கேட்கவேண்டிய அவசியமில்லை போங்கள்.

பெரியவர்.—அப்பா சனுக்கா: அப்படியல்ல அந்த ஔவை யார், எத்தனையோ நீதிவாக்கியங்களாகிய சத்தியதத்திற்கிசைந்த ஞானசுலோகங்களை யுண்டுசெய்த மஹாத்துமாவாச்சுதே: அப்படிசெல்லாதே அப்பா.

சனுக்கன்—சத்தியத்திற்கிசைந்த அப்பேர்கொத்த ஞானசுலோகங்கள்தான் என்ன ஐயா சற்றே சொல்லுங்கள் பார்ப்போம்.

பெரியவர்.—அறஞ்செயவிரும்பு. ஆறுவது சினம் என்றிப்படி யெத்தனையோ நீதிவாக்கியங்களப்பா சுந்திரம.

சனுக்கன்.—இருக்கட்டும் அவைகளின் தாற்பரிய மென்னையா?

பெரியவர்—தாற்பரியமா? சொல்லுகிறோம் கேளும்.

“அறஞ்செய விரும்பு”

அறம்—தருமத்தை. செய—செய்ய. விரும்பு—ஆசைக்கொள். (தருமத்தைசெய்ய ஆசைக்கொள்) என்றும்.

"ஆறுவதுசினம்"

ஆறுவது—தணிப்பது சினம்—கோபம். (தணிக்கபடவேண்டியது கோபமேயாம்) என்றும் அவைகளின் பொருளப்பா.

சனுக்கன்.—ஆ! ஆ! நீங்கள் மெத்தத் தெரிந்தவர்கள் தான். இந்த வியாக்கியானத்தை யெங்கே படித்துக்கொண்டீர்கள். நீங்கள்தானா எனக்குப் புத்திசொல்லவந்துவிட்டீர்கள்? வெகு நேர்த்தி. அவைகளின் அர்த்தத்தை நான் சொல்லுகிறேன் கேளுங்கள்.

அரம்—அரத்தை. அதாவது இராவுங்கருவியாகிய ஆயுதத்தை செய—செய்ய. விரும்பு—இரும்பு இரும்பைக்கொண்டு இராவுங்கருவியாகிய அரம் செய்யப்படும், என்பதாம்.

பெரியவர்.—என்னப்பாசுந்திரம். அறம் என்னும் பதத்தின் இடையிலுள்ள எழுத்தின் வித்தியாசத்தைக் கவனியாமலும், விரும்பென்னும் பதத்தை மாற்றியும் இப்படி பேசுகிறாய்.

சனுக்கன்.—என் ஐயா, உங்களுக்கு இலக்கணந்தெரியுமா? அதில், ஔ-வை. எழுதி ஔவையென்பதும் அ-வ்-வை-எழுதி அவ்வையென்பதும் ஐ-யா எழுதி ஐயா என்பதும் அ-ய்-யா. எழுதி அய்யா வென்பதும் சரியெனவொருத்துக்கொண்டு அதுபோலியென்றுப் புகல் உண்டாக்கிக்கொள்ளுகிறீர்களே அப்படிபோல வல்லின றகரத்தையாவது இடையின ரகரத்தையாவது அரமென்னும் பதத்தின் இடையில் வைத்து ஒரு பொருளாகிய அரமெனும் ஆயுதமென்று ஏன் ஒத்துக்கொள்ளக்கூடாது? இஃதன்றி விரும்பென்னும் வார்த்தையை மாற்றி. இரும்பென்று நான் சொல்வதாய்க் குறைகூறுகிறீர்கள் இலக்கணத்தில் கெடுதல் விகாரத்தைப்பற்றி படித்திருக்கிறீர்களா? அ ஆ. உ ஊ ஒ ஓ. ஔ. என்னும் உயிரெழுத்துகளுக்குப்பின் உயிர்வரின் இடையில் வகரம் உடம்படுமெய்யாகவரும் உதாரணமாக செய்ய இருக்கிறேன் என்பது செய்யவிருக்கிறேனென்றும், செய்ப அரிது என்பது சொய்யவரிது என்றும் விகாரப்படுவதுபோல் செய்ய இரும்பு என்றது செய்ய விரும்பு என்று விகாரப்பட்டது.

பெரியவர். 8-ம் சரணம்.

அடே, சத்தியத்தை மாற்றுவதுபாவம்-சொன்னேனம்
சத்தியமாய் வந்திடுமே சாமியுடசாபம். அடே.

வசனம்,

சத்தியத்தை மாற்றக்கூடாதப்பா, அதைக் கைபற்றி நடக்கவேண்டியது, சத்தியம் விளக்குக்குச் சமானமானதென்று திருவள்ளுவ நாயனுருங்கூடச் சொல்லியிருக்கிறூர் எப்படியென்றுல்.

9.

எல்லாவிளக்கு விளக்கல்ல—சான்றோர்க்குப்
பெய்யர் விளக்கே விளக்கென்றுர் முன்ஞேர்நல்ல. ௬௩.

சளுக்கன் வசனம்.

என் ஐயா, திருவள்ளுவர் மெத்த ஞானமாய் சொல்லிபோட்டார்போல மெத்த வியந்துக்கொள்ளுகிறீர்கள். அப்படி நானும் எத்தனையோ சொல்லிபோடுவேன் இப்போதும் பாருங்கள் கண்ணை மூடிக்கொண்டே ஒருகுறள் சொல்லிவிடுகிறேன்.

சளுக்கன் குறள்.

எல்லாபியரும் பியரல்ல—உண்போர்க்கு
நீலகிரி பீரே பியர்.

வேணுமானுல் போய்த் தலைவிரித்துப் பார்த்துக்கொள்ளுங்கள்.

பெரியவர். 10.

தஞ்சிஞர் செத்தார வேறல்லர்—எஞ்ஞான்றும்.
நஞ்சுண்பார்கள் ளுண்பவ—ரென்றுர் திருவள்ளுவஞர்.அடே.

சளுக்கன் —என் ஐயா, நீங்கள் வெகுவாய் மெச்சிக்கொள்ளுகிற ஔவை மதுகுடிக்கச்சொல்லி வெகு கண்டிப்பாய் சொல்லியிருக்க, நீங்களும் உங்கள் திருவள்ளுவரும், அது ஆகாதென்கிறீர்கள்.

பெரியவர்.—அப்பா சளுக்கா, ஔவையார் அப்படி ஒரிடத்திலும் சொல்லவில்லையே நீ எப்படி சொல்லுகிறுய்.

சளுக்கன்.—என் சொல்லவில்லையென்கிறீர்கள் ஔவையினுடைய, ஆக்கிச் சூடியின் ஆரம்பபாட்டையும் அதன் தாற்பரியத்தையுங் கொஞ்சம் சொல்லுங்கள்.

பெரியவர்—ஊக்கமது கைவிடல் - அதாவது ஊக்கம்—தைரியம் (தைரியத்தை) கைவிடேல்—கைவிடாதே. தைரியத்தைக் கைவிடாதே யென்றாளப்பா.

சளுக்கன்.—இவ்வளவுதானு நீங்கள் கற்றது நீங்களும் எனக்குப் புத்திசொல்ல வந்துவிட்டீர்களே மெத்த ஆச்சரியம் நான் சொல்லுகிறேன் கேளுங்கள். "ஊக்கமது கைவிடேல்' ஊக்க—தைரியத்தைத் தரத்தக்க மது—மதுவை கைவிடேல்'—கைவிடாதே, தைரியத்தைத் தரத்தக்க மதுவைக் கைவிடாதே என்பதே. இவ்விதமானக் காரியங்களை செய்யலாமென்று ஔவை சொல்லுகிறாளே தவிர வேண்டாமென்று சொல்லவில்லை, நீங்கள் தெரியாமல் வெவ்வேறு விதமான வியாக்கியானங்களை செய்துகொண்டிருக்கிறீர்கள் போதும் போதும் போங்கள்.

போதவசனம் கவனிப்பு.

இதுபோலதான், தற்காலத்திலேயும், துன்மார்க்கரான வாலிபர்களும மற்றவர்களும் சத்தியவேதம் ஒன்றுசொல்ல, அதைமாற்றி, தங்களுக்கு இசைவானபடி அர்த்தஞ்செய்து, தங்களுக்கு புத்திசொல்லுகிறவர்களை அவமதித்து தங்கள் மனம் போனபோக்கில் தாறுமாறாய் நடந்து தங்களைக்கெடுத்து அருவருப்பானகாரியங்களை செய்துவருகிறார்கள்.

பெரியவர். 11.

சொல்லிடும் பெரியோர்களின் புத்தி—அதை
தள்ளிடுவாயானாலுன் கழுத்துக்கபேதகத்தி. அடே.

12.

நேசமேமிருக்கிடும் ஈசாக்கு—சாம்
யோசேப்பு தீமோத்தேயவர்—வாலிபத்ததைநோக்கு. அடே.

13.

உன் தன் சேகமழியும்போது—ஐயோ
நினைதக்குள்ளாகினேனென் றவாவருந்தீது. அடே,

14.

சீக்கிரம்போய்த் தந்தையிடம்சேரு—உனக்கு
செப்பிடும்லாசருடைய புத்திகளைக்கோரு. அடே.

விருத்தம்.

மனந்திரும்பி தந்தையிடம் போசசான்றோர்
மதியுரைத்தால் சளுக்கன் மாறியேதன்
தனமதைக்கொண்டேகிடுவா னெனயோசித்து
தனக்கொள்ளை பிரபெடுத்தான் ஓர் உபாயம்
வனவேட்டை செயலாமென் றேவியேபல்
வாறுகயவசன மொழிந்து வெத்தி
கனமாக ஏற்றிபல வல்லாசத்தைக்
காட்டியே ஆசைமிக மூட்டினனே.

தனக்கொள்ளைபிரபு சளுக்கனை வேட்டைக்குப்போக ஏவுதல்.

கீர்த்தனம்.

இராகம், பைரவி, அடதாளம்.

பல்லவி.

வேட்டைக்குப் போய்வரலாம்—முதலியாரே
வேட்டைக்குப்போய்வரலாம்.

அநுபல்லவி

கூட்டத்துடனேசென்று—காட்டில்சிலநாள் தங்கி
ஆட்டபாட்டமாய்பிக்நிக்—அமர்ந்தங்குநாம்செய்து.

சரணங்கள்.

1.

காட்டாடுமான்கடமை—புலிசிறுத்தை
காடியுங்காட்டெருமை.

தாட்டிகமாய்த் திரமை - யுடன்சுட்டு
சாட்டுவோம் நம்பெருமை
வாட்டுவோம்நெருப்பிட்டு—மூட்டுவோமொருமூச்சு
ஈட்டுவோம் வேடிகள்—கூட்டத்துடனேநாம. வே.

2.

மயில்காடைகவுதாரியும்—இஸ்நாப்சுடன்
வைல்டக்கும் ஆட்காக்கதும்
குயில்கொக்கள்ளான்டீலும்—ஜங்கல்காக்கும்
கொண்டைலாத்தி புல்புலும்
ஒயிலாய்நடக்கும் அன்னம்—உயர்ந்தக்காணுங்கோழி
முயலும முள்ளம்பன்றி—மூர்க்கக்கோரைபன்றி. வே.

3.

ஆனைசிங்கம்வரினும்—காண்டாமிருகம்
ஆளிசிவிங்கிவரினும்
ஓனாய்கள் கூட்டம்வரினும்—தாத்திபீறும்
ஓண்டிபன்றிதான்வரினும்
பூனையவைகளென்முன்—பொடிபொடியாய்சுட்டு
கூனைநிமிர்த்துந்தனக்—கொள்ளையென்பெயரல்லோ. வே.

சுனுக்கன் வசனம்.

எனது பிரிய சிநேகரான தனக்கொள்ளை பிரபு இவ்விதமான சந்தோஷதினம எப்போது வாய்க்குமோவென்று நானும் வெகுநாள் தொட்டு யோசித்துக்கொண்டே இருக்கிறேன். பழம் நழுவி பாலில் விழுந்தார்போல நீரும் ஞாபகப்படுத்தினீர், தாங்ஸ். அப்படியே போய்வருவோம், எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தும்.

வேறு பொதுவிருத்தம்.

இப்படி பண்ணுளிருந்து வண்டுடுத்தி
எமாற்றி பொருள்பரித்ததன்றி பின்னுக்
தப்புறவாய்க்கெடுக்க தனக்கொள்ளை யெண்ணி
நூண்டினன் போய் வேட்டையாடுவோமென்

றப்படியே போம்போது சனக்கொள்ளைத்தன்
ஆனொனுங் கைக்காங்கை ராவுத்தனுக்கு
எப்பொருளும் பதனமென்ன சொல்லுவான்போல
ஏவினுன் கண்ணடித்துப் பதுக்கத்தானே.

கீர்த்தனம்.

இராகம் கௌளிபந்து, திரிபுடைதாளம்.

பல்லவி.

பந்தோபஸ்த் ராவுத்தா - பந்தோபஸ்து—எல்லாம்
பந்தோபஸ்த் ராவுத்தா - பந்தோபஸ்து—நாங்கள்
வந்திடுவோம் சீக்கிரம் - பந்தோபஸ்து.

சரணங்கள்.

1.

முத்துமாலை மோகனமாலை பந்தோபஸ்து—கை
மோதிரம் பொன் காப்புகளும் பந்தோபஸ்து
அஸ்தகடகங்களும் - பந்தோபஸ்து—கன
ஆஸ்திகளும் பாஸ்திகளும் - பந்தோபஸ்து பந்.

2.

ஆனைகளும் குதிரைகளும் - பந்தோபஸ்து—நல்ல
ஆடுகளும மாடுகளும் - பந்தோபஸ்து
நாணயப் பெட்டிகளும் - பந்தோபஸ்து—தங்க
நகைபெட்டி பணபெட்டி - பந்தோபஸ்து. பந்.

3.

பொற்சரி பாகைகளும் - பந்தோபஸ்து—வேஷ்டி
பூம்பட்டு சால்வைகளும் - பந்தோபஸ்து
கற்பதி பதக்கங்களும - பந்தோபஸ்து—பொன்
கடியாரம் சங்கிலிகள் - பந்தோபஸ்து. பந்.

4.

பெட்டிகளும் பேழைகளும் - பந்தோபஸ்து—நல்ல
பெரியபெரிய சாமானங்கள் - பந்தோபஸ்து

கட்டில் நாற்காலிகளும் - பந்தோபஸ்து—மேசை
கரண்டிமுள் கத்திகளும் - பந்தோபஸ்து. பந்.

5.

வெள்ளி சூப்டூரியன் - பந்தோபஸ்து—வெள்ளி
விலைபெற்ற டிஷ்கள் - பந்தோபஸ்து
ஜல்லிசப் வெள்ளியது - பந்தோபஸ்து—வெள்ளி
தட்டுகளின் செற்றுகளும் - பந்தோபஸ்து. பந்.

6.

காப்பி பாட்டிபாட்டு - பந்தோபஸ்து—அவை
கலப்பில்லா வெள்ளியாம் - பந்தோபஸ்து
சாப்பிடும் பிளேட்டுவெள்ளி - பந்தோபஸ்து—பொன்.
தண்ணீர் துவைத்ததுவாம - பந்தோபஸ்து. பந்.

7.

அண்டா கடாரந்தொட்டி - பந்தோபஸ்து—சோற்
றளப்பை முரந்தடைப்பம் - பந்தோபஸ்து
குண்டா கும்பாகிண்ணிகள் - பந்தோபஸ்து—ஊது
கோலுந் திருவாமணை - பந்தோபஸ்து. பந்.

8.

செப்புகுடம் சருவுகட்டி - பந்தோபஸ்து—நல்ல
ஜோகண்டி வட்டில்களும் - பந்தோபஸ்து
உப்புசட்டி வாவோடு - பந்தோபஸ்து—கல்
உரலும் உலக்கையம்மி - பந்தோபஸ்து. பந்.

9.

சோற்றுபானை சாத்துசட்டி - பந்தோபஸ்து—மா
சுங்கான் புகையிலைப்பை - பந்தோபஸ்து
வாத்து கூஸ்வாத்துகளும - பந்தோபஸ்து—கின்னி
வான்கோழி கோழிகளும் - பந்தோபஸ்து
ஜாக்கிரதை ஜாக்கிரதை - பந்தோபஸ்து— நாங்கள்
சீக்கிரமாய் வந்திடுவோம் - பந்தோபஸ்து.

விருத்தம்.

வேட்டைக்குப்போயோர்மாசம் வேசிதாசிகளோடாடி
காட்டினில் சளுக்கன்சேர்ந்தக் கருகருத்தடல்வதங்கி
வீட்டுக்கு எல்லாரோடும் விரைந்தங்கு வந்து பார்த்தால்
ஓட்டையும் உடைச்சலல்லால் ஒன்றுமேயில்லையப்பா.

போது விருத்தம்.

ஒன்றுமில்லையெனக்கண்ட சளுக்கன்சிந்தை
ஒருபொருட்டாயெண்ணமல சந்தோஷித்து
அன்று விட்டுமறுநாளே எழுந்துநல்ல
ஆனைபரிவண்டிமா டாடுயாவும்
சென்றடகுவைத்துபணங் கொண்டுமுன்போல
செலவிட்டு சிலநாட்கள் வீட்டைக்கூட
தின்றுவிட்டான் விற்றபின்னுங் கடன்கள்பட்டு
திருடனைபோல் கடன்காரர்கை சிக்கினனே.

கடன் கொடுத்தவர்கள் சளுக்கனை வாதித்தல்.

கீர்த்தனம்.

இராகம் சுருட்டி, அடதாளம்.

பல்லவி.

வாங்கினக்கடனை கொண்டு வந்துவையடா—டலே
மானமரியாதைக்கெட்ட—ஜண்டியென்னடா.

அனுபல்லவி.

பாங்காகமுனுகட்டும்—பவுசுடனேகட்டுகின்ற
வாங்கினக்கடன் கொடாத—வல்லாளகண்டபயலே.

சரணங்கள்.

1.

யோக்கியனைப்போலேவந்து-கேட்டுகின்றாயே—நாங்கள்
கேட்குமுன் தருவேனென்று-வாக்களித்தாயே
ஜாக்கிரதையாயிருப்பே-னென்றுசொன்னயே—பல
சத்தியங்கள்செய்துகெடு-வைத்துவந்தாயே

சீக்கிரமுதலுவட்டிச்-சேர்த்துச்சல்விகுறையாமல்
பாக்கியைக்கொடுத்துவிட்டு-பாராடாமறுவேலையை வா.

2.

பல்லைப்பல்லைக்கெஞ்சிகடன்-வாங்கினையடா—இந்த
பாட்டன்மார்க்கிப்போதவழி சொல்லிதீரடா
வெல்லப்பேச்சுபேசியேகை-வீசிவந்தையடா—சீசீ
வெட்கங்கெட்டமூளியிங்கே-பணத்தைப்போடடா
நல்லமரியாதையுடன்-நாணயத்தைதந்துவிடு
இல்லையானால்பள்ளிக்கூடம்-ஏற்றிடுவோம்பார்த்துக்கோடா வா

3.

வாயைமூடிக்கொண்டுசும்மா-நிற்பதென்னடா—இங்கு
வந்திருக்கும் அப்பன்மார்க்கு வழியைசொல்லடா
மாயமாலஜாலவித்தைப்-பண்ணுதேயடா—அந்த
மந்திரத்தில்மாங்காய்விழ-மாட்டாதுபோடா [வோம்
சாயத்தைவெடுத்திடுவோம் சைதாப்பேட்டைக்குப்போக்கிடு
தந்தாலிப்பயலேசும்மா-கொண்டாடாபணத்தையிங்கு. வா.

4.

ரோஷங்கெட்டவனே முகத்தில்-மீசையில்லையோடா எங்கள்
ரொக்கத்தைசிறுத்திவைக்க-வெட்கமில்லையோடா
பேசியபடிதாஜ-வேசுயில்லையோடா—உந்தன்
பெண்டாட்டிதாலியைவிற்று-கொண்டாந்துதாடா
தோஷிநீசொரணைகெட்ட-லேவசாரிபயலேபோடா
த்ரசிகட்கடிமைசெய்யும்-தப்பிலிநீயிப்பொழுதே. வா.

5.

அறிவுகெட்டவனே வுனக்கு-சொரணையில்லையோடா—நீ
அன்றாடம் சாப்பிடுகிறது-சோறோ என்னடா
சரியாயெம்பாக்கியதை-தீர்த்துப்போடடா—தப்பினால்
சாணியைகரைத்து-தலைமேலே வூற்றுவேண்டா [ண்டாம்
மரியாதையைக் காத்துக்கொள்ளு-மானங்கெட்டுப்போகவே
தெரியாதோ எங்கள்செய்தி-சின்னதனம் பண்ணிடுவேரம்.

(கடன்படுகிறவர்களுக்குண்டாகும் கஷ்டங்களும் கனக்குறைவும் இதுதான்.)

பொது விருத்தம்.

கடன்காரர்வந்து பலவாறும் திட்டி
காரி முகத்துமிழ்ந்து மடிபிடித்திழுத்து
விடமாட்டோமென் றலைக்கழித்துப் போலீஸ்
வீரர்கையில் ஒப்புவிக்க சளுக்கன் கண்ணில்
குடங்குடமாய் நீரோட வழுதகூவி
குனிந்ததலை நிமிராமல் நிற்கும்போது
உடன்பிறந்தோர்போலிருந்த நேசரெல்லாம்
உறுவிட்டார் கைக்கழுவி நழுவிட்டாரே.

(சிநேகிதர் ஆலோசித் தோடிவிடுதல்.)

கீர்த்தனம்.

இராகம்-காம்போதி, ஏகதாளம்.

பல்லவி.

உறுவிடவேணும்-மெதுவாய்நாம்
உறுவிடவேணும் இன்றே.

சரணங்கள்.

1.

ஒருவருடனுமோர்-வார்த்தையுஞ் சொல்லாமல்
ஒன்றுமறியார்போல்-நின்று வெளிச்சப்போய்
இருட்டினவுடன்-எல்லோரும் ஏகமாய்
உருதெரியாதொ-ருவரொருவராய். உறுவி

2.

ஆசாமிவன் சகவாசம் நமக்கின்னும்
அரைத்தட்டுக்கும்-வழிகிடையாதிவன்
யோகமெல்லாகமக்-காகிவிட்டதினி
போகும் வழியதை-நோக்குவதேசரி. உறுவி.

3.

உப்புசட்டிவா-வோடு வரையிலும்
உள்ளதெல்லாம் நம்கைக்-குள்ளாகி போச்சுது
இப்பொழுது நமக்-கொன்றங் குறையில்லை
சப்பென்று நாம்சம்பி-காட்டுவதே நன்று உறுவி.

4.

இன்னுநமக்கிங்கு-என்ன இருக்குது
ஏது சளுக்கன்-ஈடேறுவது இனி
பின்னுமிருந்தால்-இவன்படும் பாட்டினில்
பேர்பாதி நாமும்-பெறவேண்டி வந்திடும். உறுவி

விருத்தம்.

மறியல் செயக் கடன்காரர் வந்தபோது
வாகிவனேடிருந் தடுத்தி தின்ற நேசர்
ஒருவருமோர் வார்த்தையதும் சொல்லாவண்ணம்
ஓடிவிட்டார் எல்லோருமாக பின்பு
அறிவிழந்த சளுக்கன் கடன்காரர்கையில்
அகப்பட்டுக் காவலில் வைத்திருக்கப்பட்டு
வறியவனாய்த்திரிந்து பசிதாகங்கொண்டு
வருந்தினன் அதும் பஞ்சக்காலமாச்சே.

தேசத்திலுண்டான பஞ்சத்தால் ஜனங்களுக்குள்
ளிருந்தப் புலம்பல்.

கீர்த்தனம்.

இராகம் நாதநாமகிரியை, திரிபுடைதாளம்.

பல்லவி.

அப்பப்பா பஞ்சம்-சகிக்க முடியுதில்லை
ஐயையோ பஞ்சம்.

அநுபல்லவி

அப்பப்பா எப்பக்கத்திலும்-அப்புதே சூரியவெப்பம்
எப்படி பிழைக்கிறது-இல்லையே கொஞ்சமும் அப்பம்.

சரணங்கள்.

1.

மாரியுமில்லையே சிறு தூறலுமில்லையே ஐயோ
மாசுமந்தாரமேகம் வானத்திலில்லை ஐயையோ
ஏரிகுளத்தில்சொட்டு நீரதுமில்லையே ஆழம்
எவ்வளவுவெட்டினாலும் ஈரமுமில்லையே சாமி
ஊரிலே எங்கேபார்த்தாலும் ஒப்பாரி சப்தமல்லால்
வேறொன்றுமில்லை நாவால் விளம்பிட முடியாது. அப்.

2.

காடுமேலேகாய்ந்தவெறும் மேடுகளாய்காணுதையோ
ஆடுமாடுபுல்லில்லாமல் வாடிவாடிசாகுதையோ
நாடுநகரின்குடிகள் ஓடுதேவலசைவாங்கி
நன்செய் புன்செய்விளைச்சல்கள் கொஞ்சமேனுமில்லையே கை
ஆடுதே தள்ளாடுதே கால் சோருதே இதயஞ் சாவை
தேடுதே எம்மன் மென்ன செய்குவோம் செய்குவோமை யோ. அப்.

3.

பொடியரிசிதானுமொரு பிடியும்பஞ்சமாய்போச்சு
புத்துகளைதோண்டிஜலம வந்திச்செத்துப்போகலாச்சு
குடித்திடகேழ்வரகு கூழதுங்கிடைக்கலையே
கொள்ளு சோளம் சாமை கம்பு எள் வரகு புல்லில்லையே
கொடியபஞ்சமிதப்பா கொட்டியுங்காட்டுகிழங்கு
கொடியுமில்லையோர்பச்சை செடியுமில்லையே ஐயோ. அப்.

4.

பார்வோனின்தேசபஞ்சம் பலத்தது அதில் யோசேப்
பத்தனிருந்துதப்பு வித்தான் ஜனங்களையிவ்
வூர்பஞ்சமோ பெரிது ஒருபத்தனுமரிது
ஓலமேயன்றியனு கூலமேயில்லை ஐயையோ
ஆர்பிழைத்திடபோறார் ஐயையோ என்னசெய்குவோம்
அலங்கோலம் அலங்கோலம் அலங்கோலம் எம்பிழைப்பு.

விருத்தம்.

பஞ்சமாயினும் சனுக்கன் பாரிசமிருந்த நேசர்
கொஞ்சமுந் தளர்ச்சியின்றி குறைவிலாதிருக்கக் கண்டு

தஞ்சமென் றவளாநாடி தன்குறை யாவுஞ்சொல்லி
கெஞ்சியே தனக்கிரங்கக் கேட்டங்கு நிற்கின்றனே.

கீர்த்தனம்.

இராகம் சௌராஷ்டிரம், சாப்புதாளம்

கண்ணிகள்.

1.

அன்பானநண்பரே எனதாசைக்குரியர்களே எனை
ஆதரிக்கவேணும் உங்கள் பாதத்தை நம்பிவந்தேன்,

2.

முன்பொருக்காலெந்தனை நீர் முற்றநேசித்தீரன்றே கொடுந்
துன்புறுமிப்போது நல்ல துணைசெய்வீ ரெனக்கே.

3.

அன்றெந்தனுக்கிருந்த என்றன் ஆஸ்தியெல்லாம் போச்சு
ஒன்றுமற்ற ஏழையாய் வந்தேன் இன்றுமுங்களிடமே.

4.

கஞ்சிபருக்கையற்றேன் கட்ட கந்தைதாணியுமற்றேன்
பஞ்சைக்கோலத்துடனே உம்மை தஞ்சமென்றோடிவந்தேன்.

5.

தங்குங்குடிசையற்றேன் சிறு தாழ்வாரந்தானுமற்றேன்
உங்கள் மாளிகைகளின் மூலை யொன்றை யெனக்கருள்வீர்.

6.

காதமடைச்சுதையா என்றன் கண்களிருளுதையா
கஞ்சிகளையாலே ரண்டு கால்களுஞ் சோருதையா.

7.

கொந்துங்குளிரதனால் மிக நொந்துமெலிகிறேனைன் ஒரு
கந்தைபார்த்துக்கொடுங்கள் உங்கள்கால்களில்வீழ்ந்திடுவேன்.

8.

ஒடுங்கையுமானேன் ஒரு ஓரியைப்போலானேன்
பாடுபடதெரியாமூடப் பயல் நானென்னசெய்வேன்.

9.

சோற்றுவல் மிச்சமய்யா என்னல் சொல்லத்தெரியுதில்லை
ஆற்றுவீரென்கவலை உமக் கனந்த வந்தனங்கள்.

10. [கம்

சேர்க்காமல் போவீராஞல் நான் செத்துதான் போவேனையாமு
பார்த்தெனை சேர்த்துக்கொள்வீர் உங்கள் பாதம்பணிந்தேனை
யா.

சிநேகிதர் களுக்கனை விரட்டியோட்டல்.

கீர்த்தனம்.

இராகம் பியாகு, ஆதிதாளம்.

பல்லவி.

சீ சீ சீ போடா பையத்தியக்காரா—உன்றன்
போச்சிக்கு வேண்டாம் நடகோரா—அடே, சீ.சீ.

சரணங்கள்.

1.

வாய்ச்சாலம்பேசி சும்மா வயர்வளர்க்கவந்தாயோ
மாளாது வந்தவழிபாரடா அடே, சீ-சீ.

2.

சொந்தாள்போல்வேஷம்போட்டு சொரணையில்லாமல்வந்தாய்
அந்தாட்டில் ஈரவில்லைபோடா அடே. சீ-சீ.

22468

3.

உன்னையார்கண்டாருன்றன் சிநேகத்தை யாவர்கண்டார் வீண்
விண்ணணம்பேசாதடா போடா அடே. சீ-சீ.

4.

மிச்சமாய் வாழ்ந்தோன்போல வெறும்பேச்சு பேசிவந்தாய்
பிச்சைக்காரப்பயலேபோடா அடே. சீ-சீ.

5.

பஞ்சைப்பாட்டுகள்பாடி பல்லேகெஞ்சினுலுந்தான்
பச்சைத்தண்ணீ ருமில்லேபோடா அடே. சீ-சீ.

6.

மெல்லபசப்பியுன்னை விஸ்தரிக்க வந்தாயோ
வெந்நீரில்வீடு வேகாதெடடா அடே. சீ-சீ.

7.

சளுக்கா இன்னுமிருந்தால் தப்பா துதைப்படுவாய்
சட்டென்றெழுந்த ஓடிபோடா அடே. சீ-சீ.

விருத்தம்.

நிலம்புலனுடனேவாழும் நேயரைச்சேர்ந்துமிக்க
நலம்பெறலாமென்றெண்ணி நாடிட அவர்களெல்லாம்
அலம்பியேவுதம்பியேசி அனுப்பகைதலைமேல்வைத்து
புலம்பியே சளுக்குசுந்த்ரம் போகின்ருன் போகின்ருனே.

சளுக்கன் புலம்பிக்கொண்டு போதல்.

கீர்த்தனம்.

இராகம், மலேயாமி. அடதாளம்.

பல்லவி.

ஐயையோ என்னசெய்வேன் நான்
ஆரிடம் போயண்டுவேன்
ஆருந்துணையில் லாதபாவி
ஆன துரோகியினி.

சரணங்கள்.

1.

அண்டநிழலில்லையே என்னை
ஆதரிப்பா ரில்லையே
ஐயோ இனியென் செய்வேன் ஐயையோ
அந்நியதேச மிதில் ஐயை.

2.

தாயை யிழந்துவிட்டேன் என்றன்
தந்தை மொழிக் கடைந்தேன்
பேயன் நானென்வாழ்வை யிழந்திப்போ
பிச்சை யெடுக்கலானேன் ஐயை.

3.

புத்தியைப் போக்கடித்தேன் மூத்தோர்
போதகத்தை வெறுத்தேன்
பொய்நேசர்களின் சிநேகங் கொண்டெந்தன்
பொக்கிஷத்தை யழித்தேன் ஐயை.

4.

மெய்யுங் கருகினதே என்றன்
மேனி குலைந்ததுவே
கைகால்சோற கண்களிருளஎன்
கன்னங் கருத்ததுவே. ஐயை.

5.

கோலுங் குடுவையுடன் நான்
குருகி நடைக்கலாச்சே
கூடியெனைக் குலாவி யிருந்தமா
கூட்டங்க ளோடிபோச்சே. ஐயை.

6.

தந்தைமனம் நொந்தோ அத்தால்
தானிந்த கிர்ப்பந்தமோ
இந்த கோலமாக நேர்ந்தது
எந்தன் தலைவிதியோ. ஐயை.

7.

அன்னம் பொன்னைப் போச்சே என்றன்
ஆடைக்கந்தை யாச்சே
அல்லும் பசலுங்சொல்லைப் பெருகிரான்
அலையவும் நாளாச்சே. ஐயை.

8.

செத்தால் நலமாகுமே என்றன்
ஜீவன் போகு தில்லையே
சீர்கெட்டலையுந் தோஷியிவனின்
ஜென்ம மிருந்தாவதென். ஐயை.

விருத்தம்.

கோடுகோடென வழுதான் புலம்பிநின்றன்.
குந்தினன் எழுந்தலைந்தான் இனிமேல்மற்றோர்
வீடுகளைத்தான் தேடிபோகவேணு
மென்று தீர்மானித்து தனதுகையில்
ஒடொன்று கண்டெடுத்துக் கைக்கோல்ஒன்றி
ஒருகந்தைக் கோணிப்பையைத் தோளிலிட்டுப்
போடம்மாபோடு பிச்சையென்று வாங்கிப்
புசித்திட்டான் தெருக்களிலே வசித்திட்டானே.

சளுக்கன் பிச்சையெடுத்தல்.

கீர்த்தனம்.

இராகம் கண்டா, ரூபகதாளம்

பல்லவி.

பிச்சைப்போடுங்கோ அம்மா பிச்சைப்போடுங்கோ உங்கள்
பிள்ளைகள் முகமபார்த்து எனக்கு பிச்சைப்போடுங்கோ.

சரணங்கள்.

1.

வயிருபசிக்குதே அம்மா வயிருபசிக்குதே என்நா
வரண்டுபோகுதே-தாகத்தால் அம்மா. பிச்சை.

2.

அன்னமீயுங்கோ அம்மா அன்னமீயுங்கோ துணை
யாருமற்றப்பரதேசி நான். பிச்சை.

3.

கஞ்சிவாருங்கோ அம்மா கஞ்சிவாருங்கோ ஏழைப்
பஞ்சைநான்மிகக் கெஞ்சிகேட்கிறேன். பிச்சை.

4.

காதடைக்குதே அம்மா காதடைக்குதே என்றன்
கண்களிருண்டுப் போகுதே அம்மா. பிச்சை.

5.

கையுஞ்சோருதே அம்மா கையுஞ்சோருதே ரண்டு
கால்கள் ஓய்ந்து தள்ளாடுதே அம்மா, பிச்சை.

6.

தாயில்லாதவன் அம்மா தாயில்லாதவன் என்றன்
தந்தையையும் போக்கடித்த பாவிநான். பிச்சை.

7.

தோஷிநானம்மா அம்மா தோஷிநானம்மா உம்கால்
தூசிக்குதவை செய்திரங்குங்கோ. பிச்சை.

8.

பசியால்சாகிறேன் அம்மா பசியால் சாகிறேன் இந்த
பாவியின்முகம் பார்த்திரங்குங்கோ பிச்சை.

9.

கந்தையீயுங்கோ அம்மா கந்தையீயுங்கோ குளிர்
கொந்துதம்மணி யெந்தனுக்கொரு கந்தையீயுங்கோ. பிச்சை.

10.

தானஞ்செய்யுங்கோ அம்மா தானஞ்செய்யுங்கோ உங்கள்
சாமிமுகத்தைப் பார்த்து எனக்கோர் தர்மஞ்செய்யுங்கோ,

சளுக்கன் பிச்சையெடுத்துத் திரியும்போது அவனை ஓர் குடியானிச்சி சந்தித்தல்.

சிங்காரப்பாட்டு.

பல்லவி.

கையினில் ஓடெடுத்துக்
கச்சந்தி பைத்தோளிலிட்டு
பய்யப்பய்யப் போறப்பையா
செய்யவேலை யில்லையோடா என்னடா-அடடே.

சரணங்கள்.

1.

தடிபயலே மடப்பயலே
சங்கைக் கெட்டோர்னே பங்கமுற்றோனே
ஜண்டி யுனக்கு சங்கடமென்ன
சட்டியெடுத்துப் பிச்சைக்குவந்தாய்-அடடே
சீ-சீ-போய் பார்த்தோர் வேலைசெய்யேண்டா,

2.

இடிச்சுவர்ப்போல் இருக்கின்றையே
இரந்துதின்ன வெட்கமில்லையோ
என்னடாகேடு சீ-சீ- நீயோடு
எத்தனையோநல் உத்தியோகமுண்டு-அடடே
சீ-சீ-போய் பார்த்தோர் வேலைசெய்யேண்டா.

3.

சீக்கிரமாயோர் வேலையைத்தேடு
சின்னவனேநாள் சென்றவனே நன்றாய்
தின்றுகொழுத்து பன்றிபோலாகி
திரண்டகையும் வரண்டமூஞ்சும்
திண்டுதொடையும் கண்டசதையும்
குண்டுகழுத்தைக் கோரவுடம்பும்
உண்டுனக்கென்ன ஊதாரிபையா
சென்றலையாதே நின்றுக்கெடாதே-அடடே
சீ-சீ-போய் பார்த்தோர் வேலை செய்யேண்டா,

சளுக்கன் சொல்லுதல்,

1.

வைதுமதியுரைக்கும்
மகாராசியம்மா தாயே
செய்யவென்றால் சொல்வேன்தயை
செய்தென்சேதி கேளுமம்மா என்தாயே
அம்மம்மா, வேலையறியேன் வெட்டியறியேன்
வெய்யிலென்மீது பட்டதறியேன்
வெந்ததைத்தின்று வந்ததைப்பேசி
வெள்ளாடினவோர் செல்லப்பிள்ளைநான்
அம்மம்மா-நானுமிவ்வாறுகினேன், என்தாயே.

2.

வீட்டிலிருந்து வேடிக்கையாக
காற்றுடிவிட்டுக் காலங்கழிப்பேன்
வேளைக்குவேளை வீணைவாசிப்பேன்
விச்சித்ரமான சங்கீதம்படிப்பேன், படித்து
நானுமிவ்வாறுகினேன் என்தாயே, அம்மம்மா.

3.

பால்ப்பழமுண்பேன் பட்டினியில்லை
பட்டுபட்டாவளி கட்டியுடுப்பேன்
கால்பிடிக்க ஆள் கைபிடிக்க ஆள்
காலையும்மாலையும் வேலைசெய்யுமாள்
கண்ணுக்குக்கண்ணாய் பார்த்திடவுமாள்
கட்டிலின்மீது படுக்கவைக்கவாள்
தூக்கியெடுத்து சுத்தப்படுத்தி
துப்பட்டிக்கொண்டு துடைத்திடவுமாள் இருந்தது
நானுமிவ்வாறுகினேன் என்தாயே அம்மம்மா.

4.

இப்படியாக அப்பனின்வீட்டில்
எப்போதுவாழ்ந்து வந்தபொழுது
எத்தனின்பங்கை தந்திடசொல்லி

தந்தைமுன்சென்று தொந்தரைசெய்தேன்
அப்போது தந்தைத் தப்புறவாக
செப்பியபுத்தி மெத்தவதனை
ஒப்புக்கொள்ளாமல் ஒட்டாரஞ்செய்தேன்
எப்பொருளையும் எடுத்துகொடுத்தார் பெற்றுபோய்
நானுமிவ்வாறுகின்னன் என்தாயே அம்மமமா.

5

எல்லாவற்றையும் ஏகமாய்ச்சேர்த்து
சொல்லாமல்வந்து துஷ்டரைச்சேர்ந்து
பொல்லாவகையில் போக்கடித்திட்டேன்
புத்தியுங்கெட்டேன் சக்தியுமற்றேன்
இப்போதெனக்கொரு எச்சிலைதானும்
இல்லாமற்போச்சு சல்லியமாச்சு
அப்படியானதினாலே விப்போது
தப்பிதஞ்செய்த சண்டாளரோவதி
நானுமிவ்வாறுகினேன் என் தாயே.

குடியானிச்சி சொல்லுதல்.

பல்லவி.

இப்படியானேனென்று
எற்றிதன்னைப்பேசுகின்ற
தப்பிலிபயலிவனின்
சங்கதியைக்கேளுங்கடி யம்மாடி அடியே.

சரணங்கள்.

1.

என்னடியம்மா வாங்கோடிதங்கா
இந்தபயலின் செய்திகேளுங்கோ
என்னமோமெத்த வாழ்ந்திருந்தானும்
இப்படியாச்சாம் அப்படிபோச்சாம் அடடே
சீ-சீ போய்பார்த்தோர்வேலை செய்யேண்டா அடியே.

2.

வேலைத்தெரியாதாம் வெட்டிதெரியாதாம்
மெலுக்குற்றிருந்த சளுக்கனிவனும்

வேணகிரவியம் வைத்திருந்தாலும்
வீணில் எல்லாத்தையம் போக்கடித்தாலும்
வாழ்ந்திருந்தாலும் தாழ்ந்தப்போனாலும்
ஆழ்ந்தப்பொருளை யழித்தவிட்டாலும்
சூழ்ந்தஜனமெல்லாம் தஷ்டராலூம்
சும்மாபுலுகின்றான் எம்மாத்திரமோ அடடே சீசீ.

சனக்கன் சொல்லுதல்.

பல்லவி.

சீ-சீ யென்றேசுகின்ற மோட்டியம்மா தாயே
தோஷியிவனிப்போது சொன்னதெல்லாம் உண்மையம்மா
என் தாயே அம்மா.

சரணங்கள்.

1.

தஞ்சிபோகிறேன் கஞ்சிவாருங்கோ
சோர்ந்தபோகிறேன் சோறுபோடுங்கோ
தண்டு துணியொன்று பார்த்துக்கொடுங்கோ
தட்டுக்கொடுங்கோ கிட்டாசெயுங்கோ அம்மம்மா
கஞ்சிவாருங்களம்மா போய்வாறேன் அம்மம்மா.

2.

காதடைக்கின்றது கண்களிருளுது
கால்களயருது கையுநடுங்குது
கடைவீதிவீட்டுக் கதவடைப்பட்டுபோம்
கந்தையில்லாததால் கொந்துதம்மாகுளிர் தாயே
கஞ்சிவாருங்களம்மா போய்வாறேன்.

சனக்கன் இவ்வாறு பிச்சையெடுத்துத் திரியும்போ
தொருநாள் ஓர் குடியானவனல் அனுப்பப்பட்ட
நாட்டுபுரத்து ஆள் ஒருவன் வந்தழைத்தல்.

கீர்த்தனம்.

இராகம் தன்னியாசி, ஆதிதாளம்.

பல்லவி.

பண்ணடி கூபபிடுறாங்கோ வாடா அவுங்கோ
பண்ணிமேய்க்கிற வேலைசெய்ய்றியாடா.

அநுபல்லவி.

அண்ணாடஞ் சோறுப்புடுண்டா
அது இது கெடைக்சண்டா
நன்னாயிருக்கும் பார்ரா
நல்ல உத்தியோகண்டா. பண்.

சரணங்கள்.

1.

நில்றா சளுக்கா நின்னுகேள்றா நல்ல
க்ஷேமகாரம் நீ நெனச்சிப்பார்றா
ஜல்தியாகடந்துச் சேர்றா கொஞ்சஞ்
சாப்பாடு கெடச்சதே தேட்றா
சொல்றபேச்சிக் கேட்டாபோதும்
சொகமா யிருக்கலாண்டா
நல்லவுங்கோடா அவுங்கோ
நடவடா கூப்பிடுறாங்கோ. பண்.

2.

கந்தே பொந்தைக்கோ குடுப்பாங்கோ பழய
கஞ்சி கிஞ்சி ரொம்ப வாப்பாங்கோ
சொந்தபிள்ளைபோலெ பாப்பாங்கோ வெகு
ஜோக்கா யிருக்க செய்யுவாங்கோ
குந்திகினு பண்ணிமேச்சி
குசாலாயிருக்க லாண்டா
வந்துப்பாத்தா தெரியுண்டா
மசத்தனம் பண்ணாதேடா. பண்.

3.

நாங்கூட வந்து சொல்றேவாடா என்னை
நம்புவாங்கோடா ரொம்பம் பார்றா
எங்கிட்டே எல்லாஞ்சொல் வாங்கோடா நானும்
என்ன சொன்னாலுங் கேப்பாங்கோடா
ஊங்கிட்டே வாறாங்கோடா
ஒண்ணுங் குறையில்லேடா
உக்காரவேண்டாமடா
ஒடனே பொறப்படடா. பண்.

விருத்தம்.

ஆள்வந்து அழைக்கச்சுந்தரம் அவனுடன்பலவாருக
கேள்விகள்கேட்டுப்பின்றன் கெடுதிகள் துலேந்தநல்ல
நாள்வந்ததாக்சமென்று நம்பிபோய் எஜமானென்னும்
பாள்பன்றிகாரனைப் பண்ணுடியைக்கண்டானே.

சளுக்கன் பண்ணுடியைசந்தித்து உத்தியோகம்பேசல்

கண்ணிகள்.

இராகம் ஆனந்தபைரவி, ரூபகதாளம்.

பண்ணுடி சொல்லுதல்.

என்னிடத்தில் நல்ல - வேலேயுண்டுசெய்ய
இஷ்டமுண்டோசளுக்கா—அப்போ
துன்கவலேயெல்லாம் ஓடிடும்நல்ல
உத்தியோகண்டா சளுக்கா.

சளுக்கன் சொல்லுதல்.

என்னவேலேயெஜ - மானனே ஐயா
எனக்குனாசெய்வீரய்யா - அது
என்னலியலுமோ - பார்த்துசொல்வேனன்
இப்போதே ஐயையா.

பண்ணுடி.

என்றனுக்கேற - குறைய ரண்டாயிரம்
பன்றிகளுண்டடாநீ - நாளும்
நன்ருகமேய்த்ததை - காத்திடுவாயாகில்
நற்கனமேபெறுவாய்.

சளுக்கன்.

பன்றிகள்பாய்ந்தெனே - முட்டுமோ என்ன
பயமாயிருக்குதையா - அதின்
பால்கறந்கிடவுங் கால் லாடங்கட்டவும்
படித்தறிந்தேனில்லேயா.

பண்ணாடி.

மட்டியுனைப்பன்றி - மூட்டுமென்றுமதி
சொட்டுசொன்னதாரடா - லாடவ
கட்டுவதும்பால் கறப்பதில்லைப்பன்றி
குட்டிகள்மேய்த்திடடா.

சனுக்கன்.

மேய்ப்பதென்றால்மா - மேறிசளைவெட்டிட
வாய்தனிலூட்டுவதோ - இல்லைக்
காய்க்கறிசோறாக்கி - தையிலைதைத்துக்
கதிக்கப்படைப்பதுவே ?

பண்ணாடி.

மூட்டாள்பயலே . அதுவெல்லாமல்லடா
மூன்றுலோட்டிகொண்டுபோய் - ஒரு
கட்டாகக்கட்டினில் - விட்டால்தானேமேயும்
காப்பதுன்வேலையடா.

சனுக்கன்.

காத்தப்பகலிர - வாகவெப்போதுமக்
காட்டிலிருக்கணுமோ இல்லை
சேர்த்துசாய்ங்காலத்தில் - வீட்டுக்கவைகளை
திரும்பக்கொணரணுமோ.

பண்ணாடி.

சாயங்காலம் ஆனடா - வீடுகொணர்ந்துத்
தவிடுபிசைந்துவைதது - நீ
பங்காகத்தூரத்தில் - நின்றுபதனமாய்ப்
பார்த்துக்கொள்ளணுமடா.

சனுக்கன்.

மூட்டையிட்டுபன்றி - குஞ்சுப்பொரிக்குமே.
குட்டிதான்போட்டிடுமோ - அவ்வாற்
குட்டிபோட்டாலதைத் - தொட்டிலிட்டாட்டி
குளிப்பாட்டிடவேணுமோ.

பண்ணாடி.

பன்றிமுட்டையிடு - மென்றுநீயெங்கே
படித்துக்கொண்டாப்பயலே - அவை
ஒன்றுமில்லைபன்றி - குட்டிதான்போடும் நீ
வந்துவேலைசெய்யடா.

சளுக்கன்.

இந்தவேலைகளை - செய்வதற்கு எனக்
கென்னசமபளமய்யா - நீர்
தந்திடுவீரதை - யெந்தனுக்கிப்போது
சாற்றிடுவீர்களய்யா.

பண்ணாடி.

கந்தைப்பொந்தைப்பழங் - கஞ்சிகிஞ்சிகொஞ்சங்
காடிகழுநீர்கள் - இப்போ
தந்தால்போதாதா - இவ்வேளையுனக்கது
தானேவேண்டியதுகள்.

சளுக்கன்.

நல்லதய்யா எஜ - மானே அதுபோதும்
நானும்பிழைத்தேனையா - தாங்கள்
சொல்லியமேறையும் - பனறிகள்மேய்க்கத்
துணிந்திதோவாறேன் ஐயா.

பண்ணாடி சளுக்கனிடம் பன்றிகளையெண்ணி
ஒப்புவித்தல்.

கீர்த்தனம்.

இராகம் காம்போதி, ஆதிதாளம்.

பல்லவி.

இந்தாடாசளுக்கா—கணக்கு
எடுத்துக்கோடா சுருக்கா,

அநுபல்லவி.

உந்தனுக்குயோகம் வந்தசடா இனி
ஒன்றுங்குறையில்லாடா சளுக்கா— இங்.

சரணங்கள்.

1.

ஒன்றுமுதல்ரண்டு நூறவரையிலும்
ஒட்டன் பன்றியடா - அந்த
ஒட்டன் பன்றிகளின் பெட்டைபன்றி யவ்வா
றட்டைப் பங்காகுமடா. இங்.

2.

பெட்டைப்பன்றியல்லால் குட்டி பன்றியெல்லாம்
எட்டுநூ ருகுமடா-பின்ம
லட்டு பன்றியுங் கிழட்டுப்பன்றிகளும்
ஒற்றை நூருகுமடா. இங்.

3.

சினை பன்றியில் ஆணும் பெண்ணுமாக
நானூ ருகுமடா - அந்த
சீர்மைப் பன்றியெல்லாம் எதக்குறைய வோர்
நூறு பன்றிகளடா. இங்.

விருத்தம்.

கணக்கெடுத் தினிதாய்சுந்சரம் கைகளைக் கட்டிநின்று
வணக்கமாய் பண்ணுடிக்கு வந்தனஞ்செய்து சற்றும்
இணக்க மிலாத்வந்த ஈனபன்றிகளை மேய்த்தக்
கணக்கிலா தொல்லைப்பட்டு கலங்கியே புலம்புவானே,

சஞக்கன் புலம்புதல்.

கீர்த்தனம்.

இராகம் மோகனம், அடதாளம்.

பல்லவி.

பன்றி மேய்த்திடவந்தும்-பசிதீரவில்லை ஐயோ
பாவிபயல் நான்முன்செய்த-பாவக்கொடுமை யல்லோ
பசிக்குதே, பசிக்குதே, பசிக்குதே, என்னசெய்வேன்.

சரணங்கள்.

1.

நன்றிகெட்ட தோஷிபயல்-நானிங்கு வந்ததனால்
என்னபலன் கண்டேனென்றும் இல்லையே இதுவரையும்
ஏங்கிறேன், ஏங்கிறேன் ஏங்கிறே, னேதவித்து. பன்.

2.

தந்தைமொழி தள்ளிவந்த-சண்டாளன் நானிந்தநிற்
பந்தம்பெற பாத்திரன்றான் பாதக துரோகிமெத்த
பத்துதே, பத்துதே, பத்துதே. என்வயிரு. பன்.

3.

பண்ணடியோ கொடூரன்-பட்சமிலா முரடன்
பன்றிகள் தின்னுந்தவிடும்-படைக்கிறானில்லைஐயோ
பாவிநான், பாவிநான், பாவிநான், என்னசெய்வேன். பன்.

சஞக்கனுக்குப் புத்தி தெளிந்து, தன் தகப்பனிடம் போக யோசித்துத தீர்மானித்தல்.

கீர்த்தனம்.

இராகம் தோடி, அடதாளசாப்பு.

பல்லவி.

நானெழுந்த என் தந்தையிடஞ் செல்வேன்.

அநுபல்லவி.

வானத்துக்கு மும்க்கு - மாகப்பவம் புரிந்த
ஈன துரோகிநானென் - றியம்பி மன்றாடுவேன் நா.

சரணங்கள்.

1.

சாலமுள்ள உம் ஆஸ்தியாவையும்
ஞாலமதில் தன் மார்க்கமும் அலங்
கோலமுமாய்த் திரிந்தழன்று நற்
சீலமற செலவிட்டேன் உந்தன்
கூலியாள்போலேற்று-கொள்ளுமென்றனை நானுன்
பாலனென்றுரைத்திடப்-பாத்திர னல்லவென்பேன். நா.

2.

எத்தனையோகூலி யாட்களவரிடம்
மெத்தவும்பூர்த்தி யானபோஜனம்
நித்தநித்தம் நிறைந்திருப்பதால்
சித்தமகிழ்ந் திருக்கின்றார்களே
இத்தனையாயவ-கிருக்கும்போ தென்வயிற்
பத்தியெரியநான்-பசியினால் சாவதேன். நா.

3.

ஆனைகளும்பரி சேனையுந்தங்க
நாணயமுங்கைப் பூடணுதியும்
வேணவித விநோத கீதமும்
ஆனகெம்பீர மாகவந்தநான்
பூனையைப்போலாகிப்-புசிக்க தவிடுமற்று
ஈனபன்றிகள்மேய்க்கும்-இழிவுக்குள்ளானேனே. நா.

4.

அந்தமுள்ளயென் ஆஸ்திபோச்சுது
சந்தைகளுங்கரி வேஷமாச்சுது
சுந்தரம்போய்துர்க் கந்தம்வீசுது
தொந்தரையுந் தயருங்காச்சுது
இந்தகேடென்மதி-யீனத்தினாலெந்தன்
தந்தைமொழிகடந்து-வந்ததாலானது. நா.

சஞக்கன் புத்திதெளிந்து மனந்திரும்பி எல்லாவற்றையும் வெறுத்துதள்ளி தன் தகப்பனை நோக்கிப்போதல்.

கீர்த்தனம்.

இராகம் சங்கராபரணம், செம்படைதாளம்.

பல்லவி.

பட்டபாடுபோதும் - படு
பாவிபயல்நான் தான் இம்மட்டுக்கும்.

அநுபல்லவி.

பட்டபாடுபோதும் பல்லக்கேறிவந்து
துட்டர்களைச்சேர்ந்து தட்டுப்பட்டுக்கெட்டு. பட்.

சரணங்கள்.

1.

சிரஞ்சீவிநகரே மெய்யாய்ச் சிரஞ்
சீவிகெடுத்தாயே - நீ
உறுஞ்சியென் ரத்தமெல்லாங் குடித்தெனை
ஒட்டாண்டி யாக்கினையே
பரன்சாபம்பெற்றுப் பாழ்நகரேநாசப்
பட்டினிகெட்டுபோ விட்டுன்னைபோகிறேன். பட்.

2.

வஞ்சகநேசர்களே நன்ருய் நீரே
வாழ்ந்து சுகிப்பீரே - என்னை
பஞ்சையாக்கினீரே அதற்கேற்றப்
பங்கைப் பெறுவீரே
சஞ்சலத்தை சாக்ஷியாக வுங்களுக்கு
தான்வைத்துப்போகிறேன் நான் உங்களால்நிதம் பட்.

3.

என்னையடிமைகொண்ட கடின
எஜமானே நீ வேண்டாம் இனி

உன்னுடையோ ரெனக்கு புத்திமதி
ஒன்றுஞ் சொல்லவேண்டாம்
உன்றனுக்கோர்சலாம் மற்றோர்க்கு நான்மேய்த்த
பன்றிகுட்டிகளே வுங்களுக்கோர்சலாம். பட்.

4.

உருட்டுரொட்டியூரே இனியுன்
உறவெனக்காகாதே-என்னை
சிறுத்திடவே செய்த உன்செய்கையின்
சிநேகம் வெகுநீதே
திருட்டுபயல் ஊரே சீசீ யுன்னேசத்தால்
குருட்டுத்தனங்கொண்டு கொட்டிபணங்களே, பட்.

5.

சத்திமங்கலமே மோசஞ்செய்த
சத்துருவேபேயே - நீசெய்
புத்திமயக்காலே மதிமோசம்
போயிந்த வாறுனேன்
நத்தினபேர்களை நாணங்கெட செய்யும்
நாசபுரியேவுன் நேசமினிவேணடாம். பட்.

6.

ஓரான்திருவூரே உளைவிட்டு
ஓடிப்போனநானே-உந்தன்
பேரானந்தத்தை பெற நல்லமதி
பெற்றிதோ வாறேன்னை
சீரான என்மனை தேடியென் தந்தையை
சேர்ந்து மனங்களிகூர்ந்துப் பிழைப்பேனுன். பட்.

வெண்பா

கருகருத்து கந்தைகளை யுடுத்து சோர்ந்து
ஒருவனுரு மாறிக்கோல் ஊனறி—வருகிறதை
எந்தன்ம கவனவனோ என்றேவென் றெண்ணிதந்தை
சந்திக்க வேகினன்முன் றுன்.

சஞக்கன் தூரத்திலே வருகிறதை தன் தகப்பன் கண்டு எதிர்கொண்டுபோய் அவனை சந்தித்தல்.

கீர்த்தனம்.

இராகம் பைரவி, செம்படை தாளம்.

பல்லவி.

வருகிறவன் எனது மகன்றானோ - நடை
ஒருவகையில் அவனுதுபோல் தெரியுது வாரானோ.

சரணங்கள்.

1.

உருமாறி கந்தைக்கோலமதாய்-கோல்
ஊன்றி தடுமாறி தள்ளாடி பலட்சியமாய்
கருக நந்துடல் மெலிந் தங்க-கந்தை
கரிவேஷமுடை யவனைக் காண தூரத்தில். வரு.

2.

என்மனதின் தோற்றமோ என்ன-என்றன்
கண்ணின்முன் காண்பதெனின் நினைவலது நீனைவோ
உண்மையாய் மகன் வருகிறானோ-வந்தால்
ஓடி பலமுறை யணைத் துச்சிமுத்தேனோ. வரு.

3.

காணுமவன் என் மகனே யானால்-பார்த்த
கண்கள் குளிருமே எனது கவலைதீருமே
நாணி மடிந்திடு மெனதுமனது-கந்த
ளதபரிமள நிறையும் பாணிக்கொப்பாமே. வரு.

4,

ஏங்கல்கள் எலாம் நீங்கிப்போகும்-என்றன்
ஏக்கமெலாம் நீங்கிசுக தூக்க முண்டாகும்
பாய்துறு மென்மகனவனேயானால்-எனது
பசிதீருந் துயர்தீரும் மனந்தேறு மலவோ. வரு.

5.

ஞாடையவன்போ லிருக்கிறது-ஆனல்
தலை ரோமஞ் சடைசடையாய் தாழதொங்கிடுது
வாடை துர்கந்த வீசிடுது-இட்டி
வரவர என்மகனாக மிகவுந் தெளிகிறது. வரு.

6.

ஆமப்பா இவன் என்கண்மணிதான்-பெரிய
ஆஸ்தி வந்தெய்தினது அற்புதமிதுதான்
க்ஷேமமுந்திரள் செல்வ தனமும்-எந்தன்
ஜீவனும் வந்தது என்மகனிவன் தானே. வரு.

விருத்தம்.

கெட்டமகனிவ்விதமாய் மனந்திரும்பி
கேடுசெய்த நாடுமதின் இன்பம்யாவும்
விட்டு வரும்போது தந்தை தொலைவில் கண்டு
வேகமாயோடி கையா லவன் கழுத்தை
கட்டிமுத்தஞ் செய்தணைத்துக் கதரிமீண்டும்
கண்ணீர துடைத்தவன றோள்மேல் கையைபோட்டு
இட்டுகொண்டு தனதுமனைக் கேகும்போது
இயம்பினான் ஆறுதல் நன்னயமாய் தானே.

கீர்த்தனம்.

இராகம் தோடி, ரூபகதாளம்
ஜாவளி மெட்டு

பல்லவி.

என்மகனே என்துரையே எந்தன் கண்மணியே நீ
என்கழுத்தை கட்டிமுத்தம் இட்டிடாய் கிளியே. என்.

சரணங்கள்.

1.

உனையிழந்தேனென்று நான் எண்ணியிருந்தேன் ஆனல்
பின்னுமின்றுனை கண்டிதயபேர் ஆனந்த மடைந்தேன். என்.

2.

இந்தகோலமாகவுனைக் காணலாச்சுதே-நான்
நொந்துமனம் நைந்தழுவிது நேரலாசசுதே. என்.

3.

கண்ணேவுன் பொன்மேனிமங்கி கருகருத்தகே உன்
கண் தழிந்து காதடைத்துக் கன்னம் வாடிற்றே. என்.

4.

சுந்திரம் நீயெங்க்னின் துரைசிகாமணியே-இந்த
கந்தைககோலமாக பார்க்கவென்கண் சகிக்கலையே, என்.

5.

உச்சந்தலைதொடங்கி யந்தன் உள்ளங்கால் வரையும்-நான்
முத்தமிட கிட்டேவரவென் முத்தே ரத்தினமே, என்.

சனுக்கன் தன் தகப்பனுக்கு மாறுத்தரமாய்
வணங்கி சொல்லுதல்.

கீர்த்தனம்.

இராகம் நீலாம்புரி, ஆதிதாளம்.

கண்ணிகள்.

1.

அப்பனே எனதாருயிரே நற்ற
தப்பனேவெகு அற்பனுனுன்றனின்
பொற்பதமதைப் போற்றிவணங்கியே
செப்பிடுமென் விண்ணப்பத்தை கேள் ஐயா,

2.

நற்புகழ்நிறை யும்முடபுத்தியை
ஒப்பிடாமல்நான் உம்மைவிட்டோடிபோய்
தப்பிதங்களை செய்தலையுண்டுகெட்
டிப்பொழுதும்மைத் தேடிவந்தேன் ஐயா.

3.

என்சுயமதி போதுமென்றெண்ணியே
நின் றிருமொழி தள்ளிபிரநகர்
சென்றும் ஆஸ்தியை வீணிலழித்தங்கு
நின்றலைந்து தவித்துவந்தேன் ஐயா.

4.

பாலனென்றிட பாத்திரவானல்ல
பாவிநான்பெரும் பாவியை யாவுந்தன்
கூலியாளில ஒருவனுய்ப்பாவித்து
கொண்டு ஏற்றெனைக் கொள்ளுவீரப்பனே.

5.

அந்தரபரத்துக்கு விரோதமும்
தந்தையேவுமாறனக்குமுன்பாகவும்
நிந்தையான பாவஞ்செய்த வஞ்சகன்
எந்தனைதள்ளா தேற்றுக்கொள்வீர ஐயா.

தநதை மகனுக்கு ஆறுதல்சொல்லி தேற்றல்.

கீர்த்தனம்.

இராகம் உசேனி, ஏகதாளம்.

பல்லவி.

மகனே அஞ்சாதே என் கண்ணே-மெத்த
வருந்திமயங்கி கெஞ்சாதே-என்
வயிர் பத்தி தவேண் டாமென்னுடன் நீ
வாராயிப்போதே என்கண்ணே.

சரணங்கள்.

1.

சுகவாழ்வுனக்குண்டு என்கண்ணே-என்னை
தொடர்ந்திட தைரியங்கொண்டு-என்
சகலபாக்கிய சம்பத்துகளைத்
தருவேனதுக்கண்டு கண்மணியே. மக.

2.

போனதெல்லாம்போச்சு-என்கண்ணே போன
பொக்கிஷங்கள்-ஒருதூசு-நம்
வானோனருளால்-ஜீவனுடன் நீ
வந்ததேபெரிதாச்சு-என்பொன்னே. மக.

3.

சந்தோஷித்திருப்பாய்-என்கண்ணே-முன்போல்
சவுக்கியஙகள்-அனுபவிப்பாய்-நீ
நொந்தழவேண்டாம்-என்கண்மணியே
நோகுதென் மனம்புண்ணாய்-என்துரையே. மக.

4.

எப்போதுனைபார்ப்பேன்-எனவேநான்
இரவுமபகலாய்க்-காத்திருந்தேன்-ஆ ஆ
இப்போதுனைகண்-டப்பாமகனே
இதயமகிழ்வுகொண்டேன்-என் அரசே. மக.

5.

காணமற்போனாய்-நீ யின்று
காணவந்தென்-றனைசேர்ந்தாய்
சேனாதிபனைத்-தொழுதென்னெஞ்சம்
சேயா நீவாராய்-என்கண்ணே. மக.

6.

மரித்தாயென் றிருந்தேன்-என்நேசா-இன்று
மறுபடி யுனைகண்-டுளமகுளிர்ந்தேன்
மார்த்தாள் மரியாள்-லாசரைக்கண்ட
வாறாய் மகிழ்வானேன்-என்கண்ணே. மக.

விருத்தம்.

இவ்விதமாகதந்தை இனிய ஆறுதல்கள் செய்து
செவ்வைசேர் தன்மனைக்கு சேயனைக் கொடுபோய்சேர்த்து
எவ்வகைக் குறைவராமல் இணக்கமா யெல்லாம்செய்ய
ஒவ்வொரு ஊழியர்க்கும் ஒதவான் ஒதவானே.

கீர்த்தனம்.

இராகம் பியாகு, ஆதிதாளம்.

பல்லவி.

ஓடிவாரும் ஓடிவாரும் - என்றன் ஊழியர்களே
ஓடிவாரும் சீக்கிரம் நான் - சொல்வதை செய்வீர்களே.

சரணங்கள்.

1.

வாடிநின்றிடமாற் சுத்த - மானவெந்நீர் வையுங்கள்
மைந்தன் சுந்தரம் வந்தனர் - அவரைஸ்நானஞ் செய்யுங்கள்.

2.

உயர்ந்த வஸ்திரங்கள்கொண்டு - வந்திவர்க் குடுத்துங்கள்
ஒன்றிலுங்குறை வராமல் - நின்றுநீர் நடவுங்கள்.

3.

கைக்கு கணையாளிமோதி - ரத்தைகொண்டுவாருங்கள்
காலுக்குநற் பாதரட்சை - களைக்கொணர்ந்து போடுங்கள்.

4.

கொழுமையான கன்றைகொண்டு—வந்தடித்துப் பொரியுங்கள்
குறைவிலாம லிவர்புசிக்க - கூறிமுன் படையுங்கள்.

5.

சங்கீதம் படிக்குலாசர் - தாசனையழையுங்கள்
தம்பூர்வீணை மிர்தங்கங்கை - தாளஜாலரடியுங்கள்,

6.

இந்தமேறை நாமெல்லோரும் - சந்தஷ்டி கொண்டாடியே
மைந்தன் சளுக்கு சுந்த்ரமுதலி - மகிழசெய்வோம் பாடியே.

7.

மரித்த என்மகனிவன் - மறுபடி பிழைத்தனன்
மறைந்தமே காணமற்போனேன் - திரும்பி காணவந்தனன்.

எஜமானனுகிய தன சுந்தரமுதலி, தன் ஊழியர்களுக்கு கட்டளையிட்டபடியே அவர்கள்செய்து ஓர் சங்கீத வித்துவானை யழைத்து ஸ்தோத்திர சதுர்கச்சேரி நடத்தல்.

கீர்த்தனம்.

இராகம் பைரவி, ரூபகதாளம்.
ஜாவளிமெட்டு.

பல்லவி.

வந்தனம் - சந்ததம்
வானேன் றிருவடி - தானமதற்கே.

சரணங்கள்

1.

அந்தமுறுந்தன - சுந்திரனின்
மைந்தன் சுந்தரம் -வந்ததால், மிக. வந்.

2.

மாண்டழிந்து - மீண்டுயிர்த்த
வாறதாக - வந்ததால், நிதம். வந்.

3.

காணுமற்போ - யிருந்தவன்றன்
தோணசெய்த - சேணரன்பதம். வந்.

4.

சத்துருசோ - தனையதனுல்
சாவுறுமற் - காத்தபார்கதி. வந்.

5.

தியர்களின் - நேசம்விட்டு
தேடிதாதையை - நாடிவந்ததால். வந்.

6.

லாசருதா - சன் துதிக்கும்
நேசசரு - வேசனிருகழல். வந்.

விருத்தம்.

எனதுடைய மனமடியமதிகலைய நினைவழிய
இடைதளர நடையிடறிட
இயல்புக்கடாதநட-வடிசுடனே செய்வித்து
எனையழைத்திடுந் தந்தையே
நினதிடமே பலவருட மடைவுடனிருந்து நீர்
நியமித்த வேலைகளெலாம்
நிறைவாக செய்தமது கற்பனைகள் பிசகாமல்
நின்றாழியங்கள் செய்தேன்
மனமகிழ நானுமென் நேசரும் சந்தோஷ
மாய்க்கூடி பந்திவைத்து
மங்களமுடனே இருந்திட நீயெனக்கொரு
மறிகுட்டி தந்ததில்லை
உனதுடைய ஆஸ்திகளை தாசி வேசிகளுக்கு
உதரிகெட் டோடிவந்த
ஊதாரிக்கிப்படி நீர் செய்வது நியாயமோ ?
ஓதவீர் ஓதவீரே.

பின்னும் தகப்பனர் சொல்லுதல்.

சரணங்கள்.

1.

கண்மணிமகனே எந்தன் - கற்கண்டே சர்க்கரையே
வன்மனங்கொள்ளாமல் உள்ளே - வாராய் நீ யென்துரையே

2.

என்றனுக்குடையதெல்லாம் - உந்தனுக்குரியதப்பா
ஒன்றுக்குமஞ்சாமல் மன - ஊக்கமுடனே வாழ்வுன் கண்.

எப்பொழுதுநீ யென்னுடனே - இருந்திருக்கின்றாயல்லோ
இப்பொழுது முன்றனுக்கின் கேதுங்குறையில்லையென் கண்.

4.

மரித்துப் பிழைத்தேனேபோல - வந்தவன் உனதுதம்பி
குறித்து சந்தோஷங்கொள்வோம் குமாரனே. கண்.

600 008